padippakam

# கலையும் இலக்கியமும்



## மா சே-துங்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# கலையும் இலக்கியமும்

மா சே-துங்

தமிழாக்கம்:

முகவை. ராஜமாணிக்கம்

தமிழ்ப் புத்தகாலயம்
11, சிவப்பிரகாசம் தெரு
பாண்டிபஜார், தி.நகர்
சென்னை - 600 017

படிப்பகம்

padippakam

கலையும் இலக்கியமும்

முதற்பதிப்பு ஜனவரி 1951
நான்காம் பதிப்பு ஜூலை 1988
ஐந்தாம் பதிப்பு டிசம்பர் 1995

விலை ரூ. 12-00

உரிமை பதிவு : தமிழ்ப் புத்தகாலயம்

Laser Typeset: M/s Skill Computers, Madras - 600 018

Printed at: Sri Selvavinayaga Offset, Madras - 600 005.

படிப்பகம்

padippakam

# தொகுத்தவர் குறிப்பு

சீன விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட கலை, இலக்கியப் பிரச்சினைகள் பற்றிய ஒரு மகாநாடு, அன்று விடுதலை இயக்கத்தின் தலைநகரான யேனானில், 1942 மே-2லிருந்து மே 23-வரை நடந்தது.

சீனாவின் பல பாகங்களிலிருந்தும் - ஜப்பானியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த ஷாங்கை, நாங்கிங்கிலிருந்தும், கோமின்டாங் சுங்கிங்கிலிருந்தும், விடுதலையடைந்துள்ள மாகாணங்களிலிருந்தும் - எழுத்தாளர்களும், கலைஞர்களும் யேனான் மகாநாட்டில் கலந்து கொள்ள வந்தார்கள்.

ஏதோ, சாவதானமாக நடத்தப்பட்ட மகாநாடு போல் தோன்றிற்று; மூன்று சாதாரண பூர்வாங்கக் கூட்டங்கள் தான் நடைபெற்றன; மற்ற நேரமெல்லாம், தனித்தனியாகப் படிப்பதற்கும், கூடி விவாதிப்பதற்கும் ஒதுக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் தலைவரும், விடுதலை பெற்றுத் தந்தவருமான மா சே-துங், மே 22ல் மகாநாட்டைத் திறந்துவைத்து, ஒரு சிறு முகவுரையில், விடுதலைப் போராட்டத்தின் அடிப்படைப் பிரச்சினைகளையும், இந்தப் போராட்டத்தில் எழுத்தாளர்கள், கலைஞர்களுடைய பாத்திரம் என்ன என்பது பற்றியும் எடுத்துக் கூறினார். மீண்டும் அவர் மே 23-ல் பேசினார்; இந்தத் தடவை மகாநாடு முடியும் தறுவாயில், மகாநாட்டு வேலைகளைப் பற்றிப் பரிசீலனை செய்து, மூன்று வாரங்களாக நடந்த விவாதங்கள், பேச்சுகளுக்கிடையே எழுந்த பல பிரச்சினைகளுக்கு விளக்கமான பதில்கள் கொடுக்கும் முறையிலும் பேசினார்.

1942 மே மாதத்தில், இப்படி எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஒன்று திரண்டு கூடிய மகாநாடு, பெர்ல் ஹார்பர் சம்பவம் நிகழ்ந்த ஐந்தே மாதங்களுக்குப் பிறகு நடந்தது .என்பது

படிப்பகம்

padippakam

குறிப்பிடத்தக்கது. சீனாவிற்கு மிக நெருக்கடியான அந்தத் தருணத்தில் - ஜப்பானியப் படையெடுப்பாளர்களை எதிர்த்தும் சீன மக்களின் ஒற்றுமைக்காகவும், ராணுவ, அரசியல் போராட்டம் நடைபெற்ற அந்தச் சமயத்தில் - கலை, இலக்கியம் பற்றிய தேச வியாபகமான ஒரு மகாநாட்டைக் கூட்டியது, விடுதலை இயக்கத்தில் வைத்த நம்பிக்கையோடு மட்டுமல்ல; தேச விடுதலை யுத்தத்தை நடத்துகின்ற பொழுது, கலாச்சார சக்திகள் உள்படச் சகல பொதுஜன சக்திகளையும் ஒன்று திரட்டுகின்ற முறையை - அவசியத்தை உணர்ந்திருக்கின்றதை யும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

---

வாசகர்களின் சௌகரியத்திற்காக அத்தியாயத்தின் தலைப்புகளும், உப தலைப்புகளும் இம் மொழிபெயர்ப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

படிப்பகம்

padippakam

# கலையும் இலக்கியமும்

## பீடிகை

தோழர்களே! இலக்கியம்-கலைக்கும், பொதுவான புரட்சிகரமாயுள்ள கடமைக்கும் இடையிலுள்ள சரியான உறவைப்பற்றி நாம் விவாதிக்கவும், நமது புரட்சி இலக்கியத்தையும், கலையையும் சரியாக வளர்க்கவும், நமது இதர புரட்சி நடவடிக்கைகளுக்கும் பலமான ஆதாரமாக அவைகளை ஆக்க வழிவகை வகுக்கவும் நீங்கள் அழைக்கப் பட்டிருக்கிறீர்கள். இத்தகைய விவாதங்களின் மூலமாக, நமது தேச விரோதிகளைத் தோற்கடித்து, நமது தேச விடுதலைக் கடமையை நிறைவேற்றவும் நம்மால் முடியும்.

சீன தேசத்தை விடுவிக்கும் நமது போராட்டம், பல முனைகளிலும்-கலாச்சார முனையிலும், ராணுவ முனை யிலும்-நடத்தப்பட்டு வருகின்றது. நமது விரோதிகளை நாம் முறியடித்து வெற்றி பெறுவது, பிரதானமாக, துப்பாக்கி ஏந்தி நிற்கும் சிப்பாய்களையே பொறுத்திருந்தாலும், சிப்பாய்கள் மட்டும் இதற்குப் போதாது. தேசத்தை ஒன்றுபடுத்தி, எதிரியை முறியடிக்கும் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒரு கலாச்சாரப் படையும் நமக்கு இருக்க வேண்டும்.

ஒரு கலாச்சாரப் படை, சீனப் புரட்சிக்கு மிகவும் பேருதவியாக நின்ற ஒரு படை, மே நான்கு இயக்கத்திற்குப் பிறகு (1919 மே 4ல் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் இயக்கம்) அமைக்கப்பட்டது. அது ஏகாதிபத்தியச் செல்வாக்குப் பரவி யிருந்த பிரதேசத்தைப் படிப்படியாகக் குறைத்தது; ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்கும் நிலப்பிரபுத்வ, அடிமைக்

படிப்பகம்

padippakam



கலாச்சார சக்திகளைப் பலவீனப் படுத்தியது. இப்பொழுதெல்லாம், ''அளவா, குணமா'' என்று பந்தயம் போடுகின்ற வழியைக் கையாளுவதன் மூலமாக மட்டுந்தான், பிற்போக்குப் பிண்டங்கள், புதிய கலாச்சாரத்தை எதிர்க்க முடிகிறது; அதாவது சாதனங்கள் நிறையப் பெற்றுள்ள பிற்போக்கு வாதிகள் கலை, இலக்கிய நூல்கள் என்று சொல்லப்படுகிற குப்பைகளை டன் கணக்கில் உற்பத்தி செய்து குவித்து விடுகிறார்கள்; நல்ல நூல்களை அவர்கள் உற்பத்தி செய்ய முடியாவிட்டாலுங்கூட, குப்பைகளை ஏராளமாகக் குவித்து விடுகிறார்கள்.

மே நான்கு இயக்கத்திற்குப் பிறகு, நமது கலாச்சார அரங்கத்தின் இலக்கிய-கலைப் பகுதியில், பிரமாதமான சாதனைகள் காணப்படுகின்றன. உள் நாட்டு யுத்தம் நடந்த காலங்களில் (1927-1936) கலை, இலக்கியப் புரட்சி இயக்கம் மிகப் பெரிய அளவிற்கு வளர்ந்தோங்கியது. இந்த இயக்கமும், செஞ்சேனையின் ராணுவ நடவடிக்கைகளும் ஒரே பொது வழியில் நடை போட்டாலுங்கூட, உண்மையில் அவைகள் இரண்டுக்கும் இணைப்பு இருக்கவில்லை. இநத இரண்டு சகோதரப் படைகளும், தனித் தனியாகவே நின்று போர்களில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது; ஏனென்றால், பிற்போக்கு வாதிகள் அவைகளைப் பிரித்து வைத்தார்கள். (செஞ்சேனை, கியாங்சி மாகாணத்தில் சுற்றி வளைத்துக் கொள்ளப்பட்ட சமயம், கலாச்சார ஊழியர்கள் ஷாங்கையிலோ அல்லது பீப்பிங்கிலோ இருந்தார்கள்) ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டத்தை நாம் ஆரம்பித்த பிறகு, புரட்சிகரமான எழுத்தாளர்களும் கலைஞர்களும், யேனானுக்கும், நமது இதர யுத்த தளங்களுக்கும் அதிகமாக வரத் தலைப்பட்டார்கள். இது ஒரு நல்ல அறிகுறி. ஆனால் இந்தப் பிரதேசங்களுக்கு அவர்கள் வந்துவிட்டதனால், அங்குள்ள மக்கள் இயக்கத்தில் அவர்கள் கலந்து கொண்டார்கள் என்பது அர்த்தமல்ல. ஆயினும், நமது புரட்சிகரமான வேலையில் நாம் முன்னேற வேண்டுமானால், இந்த இரண்டு சக்திகளையும் நாம் இணைத்தாக வேண்டும்.

படிப்பகம்

padippakam



இலக்கியத்தையும் கலையையும், நமது புரட்சிகரமான யந்திரத்தின் ஒரு அங்கமாக்கும் குறிப்பிட்ட காரணத்துக்காக, இந்தக் கூட்டத்தை நாம் கூட்டியிருக்கின்றோம். இதன் மூலம், நமது மக்களை ஒன்றுபடுத்தி அவர்களுக்குக் கல்வியளிக்கவும், பகைவரை எதிர்த்து அழித்தொழிக்கவும், ஐக்கியமாக நின்று எதிரியோடு போராடுவதில் அவர்களுக்கு உதவி புரியவும் கூடியதான ஒரு வலிமை மிக்க ஆயுதமாக இக்கலையும், இலக்கியமும் விளங்கும். இந்த நோக்கத்தைச் சாதிக்க வேண்டுமானால், எந்தெந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்? நமது நிலை, நமது போக்கு, நமது மக்கள், நமது வேலை, நமது பாடம் ஆகியவைகள் தான்.

நமது நிலை என்ற பிரச்னை: - நமது அபிப்பிராயம் என்பது, பாட்டாளிகள், பொது ஜனங்களின் அபிப்பிராயம்தான். கம்யூனிஸ்ட்கட்சி மெம்பர்கள், கட்சியின் அபிப்பிராயத்தையும், கட்சியின் கொள்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். இந்த நமது நிலையைப்பற்றி, பல எழுத்தாளர்களும், கலைஞர்களும் இன்னும் தெளிவான சரியான அபிப்பிராயங் கொள்ளவில்லை என்பது உண்மை தானா? அப்படித்தான் நான் நினைக்கிறேன். நமது தோழர்களில் பலர் தப்பான நிலையைக் கடைப்பிடிப்ப தாகத் தெரிகிறது.

நமது போக்கு என்ற பிரச்னை:- நமது நிலை என்ற பிரச்னைக்குப் பிறகு, ஸ்தூலமான விஷயங்களில் நமது போக்கு பற்றிய பிரச்சினை எழுகிறது. உதாரணமாக, போற்றுவதா - தூற்றுவதா என்ற பிரச்னையை எடுத்துக்கொள்வோம். இது நமது போக்கு பற்றியதாகும். நாம் எத்தகைய போக்கை அனுஷ்டிக்க வேண்டும்? விவாதத்திலிருக்கிற விஷயத்தைப் பொறுத்து, இரண்டில் ஒன்று, அல்லது இரண்டையும் நாம் அனுஷ்டிக்க வேண்டுமென்றுதான் நான் சொல்வேன். மக்களில் மூன்றுவித மிருக்கிறார்கள்; நமது எதிரிகள், நமது நேசர்கள், நாம்-அதாவது பாட்டாளிவர்க்கமும் அதன் முன்னணிப் படையும். இந்த மூன்று பிரிவுகளின் மீது, வெவ்வேறு போக்கை நாம் அனுஷ்டிக்க வேண்டும்.

படிப்பகம்

padippakam



நமது எதிரிகளை - ஜப்பானிய பாசிஸ்ட்களையும், மக்களின் இதர எல்லா எதிரிகளையும் நாம் போற்றலாமா? போற்றவே முடியாது. ஏனெனில், அவர்கள் தீமையே உருவான பிற்போக்கு வாதிகள். அவர்கள் சில உறுதியான அம்சங்கள் கொண்டவர் களாக இருப்பினும், அவர்களைப் போற்றமுடியாது. உதாரண மாக, அவர்களிடம் பிரமாதமான துப்பாக்கிகளும், பீரங்கிப் படையும் இருக்கலாம். ஆனால், இந்தப் பிரமாத ஆயுதங்கள் அவர்கள் கைகளில் இருப்பதனால், பிற்போக்குக் கருவிகளாக ஆகின்றன. இந்த ஆயுதங்களைக் கைப்பற்றி, எதிரியின் நெஞ்சுக்கு நேரே நீட்டுகின்ற கடமை, நமது ராணுவப் படையைச் சேர்ந்ததாகும். நமது எதிரிகளின் கொடுமைகளையும், துரோகங்களையும் அம்பலப்படுத்தி, அவர்கள் தோல்வி யடைவது நிச்சயம் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதும், ஜப்பானிய எதிர்ப்புச் சக்திகள் யாவற்றையும் ஒன்று திரட்டி நமது எதிரிகளை உறுதியாகவும் இதய பூர்வமாகவும் எதிர்த்து நிற்கத் தூண்டுவதும், நமது கலாச்சாரப்படை மேற்கொள்ள வேண்டிய கடமைகளாகும்.

நமது நண்பர்கள், நமது பலதரப்பட்ட நேசர்கள் இவர்களைப் பொறுத்தவரையில் நமது போக்கு, கூட்டுறவும் அதனோடு விமர்சனமும் என்ற முறையில் இருக்க வேண்டும். கூட்டுறவு என்றால் அதில் பலவிதமுண்டு; விமர்சனத்திலும் பலவிதங்கள் உண்டு. அவர்களது ஜப்பானிய எதிர்ப்பை நாம் ஆதரிக் கின்றோம்; அவர்களது சாதனைகளை நாம் பாராட்டுகின்றோம். ஆனால் அதே சமயத்தில், ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக இல்லாதவர்களைக் குற்ற விமர்சனத்துக்கு உள்ளாக்க வேண்டும்; கம்யூனிஸ்ட்கள், பொதுஜனங்கள் இவர்களுக்கு எதிர்க்கட்சியில் நிற்பவர்களையும், பிற்போக்குப் பாதையில் மெள்ள மெள்ள அடியெடுத்து வைத்துச் செல்பவர்களையும் எதிர்த்து நிற்கவேண்டும்.

பொது ஜனங்கள், அவர்கள் வேலை, போராட்டம் பற்றியும், மக்கள் படை, நமது கட்சி இவைபற்றியும், நமது போக்கு

படிப்பகம்

padippakam



நிச்சயமாகப் புகழத்தக்க ஒன்றாகவே இருக்க வேண்டும். ஆனால், மக்களிடத்திலும் குறைபாடுகள் இருக்கின்றன; பாட்டாளி வர்க்கத்தினிடையே பலரிடம், குட்டி பூர்ஷ்வா தத்துவ வாதம் இருக்கின்றது; விவசாயிகள், குட்டி பூர்ஷ்வா அங்கத்தினர்கள் சிலரிடையே, பிற்போக்குத் தத்துவத்தின் மிச்ச சொச்சங்கள் இருக்கின்றன; அவர்களின் போராட்டத்தில், இவைகள் எல்லாம் இடைஞ்சலாயிருக்கின்றன; அவர்களுக்குக் கல்விப் பயிற்சியளிக்கும் நீண்டகாலக் கடமையில், நாம் மிகப் பொறுமையாக ஈடுபட வேண்டும்; அவர்களின் சுமையைத் தூக்கி யெறிந்துவிட்டு, வீரமிக்க நடைபோட்டு முன்னேறுவதற் கான முறையில், அவர்களுக்கு நாம் உதவி புரிய வேண்டும்; போராட்டத்தின் மூலம், அவர்கள் தங்களைத் திருத்திக்கொண்டு விட்டார்கள், அல்லது திருத்திக் கொண்டிருக்கிறார்கள்; அந்த மாற்றத்தை நமது இலக்கியமும், கலையும் விவரிக்க வேண்டும்; ஒரு கோணத்திலிருந்து மட்டும் பார்க்கக் கூடாது; அவர்கள் தவறுகளைக் கண்டு ஏளனம் செய்யக்கூடாது; அவர்களைப் பகிரங்கமாக எதிர்ப்பதைக் கைக்கொள்ளக் கூடாது. பொது மக்களை ஐக்கியப்படுத்தி, அவர்கள் முன்னேறுவதற்கு ஏது வாகவும், எதிர்காலப் போராட்டத்திற்கு அவர்களை இதய பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் திரட்டுவதற்கும், பின் தங்கிய நிலைமையிலிருந்து அவர்கள் மீளுவதற்கு உதவவும், அவர்களது புரட்சிகரமான, தன்மைகளை விருத்தி செய்யவும் உதவிபுரியும் முறையில், நமது வேலைகள் இருக்க வேண்டும். இதற்கு நேர்மாறான திசையில் நமது வேலைகள் இருக்கக் கூடாது.

நமது மக்கள் என்ற பிரச்சினை:- யாருக்காக இலக்கியமும், கலையும் சிருஷ்டிக்கப்பட வேண்டும்? இதற்குப் பல விதமான பதில்கள் உண்டு. ஷென்சி-கான்சு-நிங்சியா எல்லைப் பிர தேசத்திலும், நமது ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களான வடக்கு-மத்திய சீனாவிலும் ஒருவிதமான பதில் உண்டு; பொதுவாக நகரங்களிலும் (கோமிண்டாங் பிரதேசங்கள்), யுத்த

படிப்பகம்

padippakam



முற்கால ஷாங்கையிலும், வேறுவிதமான பதில் உண்டு. யுத்தத்திற்கு முன், புரட்சிகரமான இலக்கிய, கலை நூல்களை விரும்பும் ஷாங்காய் மக்கள்-பிரதானமாக மாணவர்களும் ஆசிரியர்களும், உத்தியோகஸ்தர்களுமாவர். யுத்தத்திற்குப் பிறகு, பொதுவான அரங்கங்களிலுள்ள வாசகர் குழாம் பெருகியிருக்கிறது என்றாலும், அதே பழைய கூட்டத்தினர் மட்டுந்தான் வாசகர்குழாமாக இருக்கிறார்கள்; ஏனெனில், புரட்சிகரமான இலக்கியத்தையும் கலையையும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள் இவர்களுக்கு எட்டாதவாறு சர்க்கார் அங்கு செய்து வைத்தது.

நமது பிரதேசங்களில், நிலைமை இதற்கு நேர்மாறானது. இங்கு, தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள், அவர்களோடு கட்சி, சர்க்கார், சேனை இவற்றிலுள்ள நமது ஊழியர்கள், நமது புரட்சிகரமான இலக்கியம், கலை இவற்றின் வாசகர்களாகவும் காட்சியாளர்களாகவும் இருக்கிறார்கள். நமது தளங்களில் மாணவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் பழைய ரக மாணவர்களல்ல. நமது ஊழியர்களாக இதற்குள் அவர்கள் ஆகவில்லையென்றால், வெகு சீக்கிரம் ஆகிவிடுவார்கள். சகலவிதமான ஊழியர்கள் - சேனையிலுள்ள சிப்பாய்கள், தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள், கிராமங்களிலுள்ள விவசாயிகள் - அவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டவுடன், புத்தகங்கள் பத்திரிகைகள் படிக்க விரும்புகிறார்கள். இன்னும் வாசிக்க முடியாதவர்கள்கூட, நாடகம், சினிமா பார்க்க ஆவல் கொள்கிறார்கள்; இசைபாட வேண்டும், சங்கீதம் கேட்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அவர்கள்தான் நமது இலக்கியம், கலையை ரசிக்க விரும்புவார்கள்.

உதாரணமாக, நமது ஊழியர்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள், ஜனத் தொகையில் ஒரு சிறிய பகுதியைத் தானே பிரதிபலிக்கிறார்கள் என நினைத்துவிட வேண்டாம்; பொது அரங்கத்தில், 2000 பிரதிகள் பிரசுரிக்கப்படும் எந்த ஒரு

படிப்பகம்

padippakam



புத்தகத்தையும் படிப்பவர்களில், இவர்கள்தான் அதிக மானவர்கள். ஒரு புத்தகத்தை மூன்று பதிப்புக்களாக வெளியிட்டாலுங்கூட, மொத்தம் 6000 பிரதிகள்தானாகும். ஆனால் யேனானில் மட்டும், வாசிக்கத் தெரிந்த நமது ஊழியர்கள் தொகை 10,000 மாகும். அதுவும் தவிர, நமது ஊழியர்களில் பெரும்பாலோர், பல வருடங்களாகப் போராட்ட அனுபவத்தில் புடம் போட்டுப் புரட்சி மெருகேறியவர்கள். தேசத்தின் நாலா திசைகளிலிருந்தும் வந்துள்ளார்கள், அவர்கள். அவர்கள், கஷ்டமான பிரதேசங்களில் வேலை செய்வதற்காக அனுப்பி வைக்கப்படுவார்கள். ஆகையினால், இவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்க வேண்டியது மிக முக்கியமாகும். நமது எழுத்தாளர்களும் கலைஞர்களும், அவர்களிடையே பிரமாதமான வேலை செய்ய முயற்சிக்க வேண்டும்.

இலக்கியமும்-கலையும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள், அவர்களிடையேயுள்ள ஊழியர்களுக்காகச் சிருஷ்டிக்கப்படுவதால் அவர்களை எப்படி அறிந்து, உணர்ந்து கொள்வது என்ற பிரச்சினை எழுகின்றது. பலவிதமான விஷயங்களை அறிந்து உணர்ந்து கொள்ளவும் பலவிதமானவர்களைப் புரிந்து அவர்களோடு பழகிக் கொள்ளவும், அவர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ-கட்சியில், சர்க்கார் காரியாலயங்களில், கிராமங்களில், தொழிற்சாலைகளில், 8-வது திசைப்படையில், புதிய நாலாவது படையில்-அங்கெல்லாம் விரிவான வேலை செய்தாக வேண்டும். எழுத்தாளர்களும், கலைஞர்களும், அவர்களது சிருஷ்டி வேலைகளைத் தொடர்ந்து செய்ய வேண்டியதுதான்; ஆனால் அவர்களின் பிரதான-முக்கிய கடமை என்னவென்றால், மக்களை அறிந்து, அவர்கள் வழிமுறைகளைப் புரிந்து கொள்வதுதான்.

இது சம்பந்தமாக, நமது எழுத்தாளர்களும், கலைஞர்களும் என்ன செய்து வருகிறார்கள்? மக்களை அவர்கள் அறிந்து கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ, கற்றுக் கொண்டிருக்கிறார்களென்று நான் நினைக்கவில்லை. மக்களை அவர்கள் அறிந்து

படிப்பகம்

padippakam



கொள்ளாமலிருப்பது, போர்க்களமில்லாத போர்வீரர்கள் போன்ற தன்மைக்கு ஒப்பாகும். எழுத்தாளர்களும் கலைஞர்களும் அவர்கள் விரித்துரைக்கும் விஷயங்களோடும், வாசகர்களோடும், பழக்கமில்லாதவர்கள் போலிருக்கிறார்கள் என்பதோடுமட்டுமல்ல, சில வேளைகளில் அவர்களிடமிருந்து பூரணமாக விலகியும் நிற்கிறார்கள். நமது எழுத்தாளர்களும், கலைஞர்களும்-தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள் அல்லது அவர்களிடையே இருந்து தோன்றும் ஊழியர்களையும் அறியமாட்டார்கள். அவர்கள் எதைப் புரிந்துகொள்ளவில்லை? அவர்கள் பேசும் மொழியைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் பேசுவது அறிவாளிகளின் மொழியில்; பொது மக்களின் மொழியில் அல்ல.

நான் முன்னே சொன்னேன் - நமது தோழர்களில் பலர் ''மொழியைப் பரப்புவது'' பற்றிப் பேச ஆசைப்படுகிறார்கள் என்று. ஆனால் ''மொழியைப் பரப்புவது'' என்றால் அதற்குச் சரியான அர்த்தம் என்ன? நமது எழுத்தாளர்களும்-கலைஞர்களும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களின் எண்ணங்கள் உணர்ச்சிகளோடு தங்கள் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் ஒன்றாகக் கலக்க வேண்டும் என்று அர்த்தம். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக பொது ஜனங்கள் பேசும்மொழியை நாம் கற்றுக்கொள்ள ஆரம்பிப்பதுதான் முதல் வேலை. பொதுமக்கள் பேசும் மொழியை நாம் புரிந்து கொள்ளாவிட்டால், இலக்கியத்தையும், கலையையும் சிருஷ்டிக்கிறோமென்று நாம் எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்?

போர்க்களமில்லாத போர்வீரர்கள் என்று நான் குறிப்பிட்டபோது, நான் என்ன கருத்தில் அதைக் கூறினேன் என்றால்; ஸ்தூலமில்லாது தத்துவங்கள் இருந்தால், அவைகளை மக்கள் ரசிக்க முடியாது என்ற கருத்தில்தான். அத்தகைய தத்துவக் கோட்டையை நிர்மாணிக்கப் போவதாக வர்ணித்தால், ஒரு பெரிய வரப்பிரசாதி அல்லது ஒரு பெரிய மேதையென்று பீத்திக்கொண்டு வாய்ப் பந்தல் போட முனைந்தால், அத்தகைய

படிப்பகம்

padippakam



உங்கள் நூலை, மக்கள் நிச்சயமாகத் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டார்கள். பொது ஜனங்கள் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், பொதுமக்களோடு நீங்கள் கலந்துவிட வேண்டுமென்று நீங்கள் கருதினால், அவர்களது அளவுக்குகந்த முறையில் உள்ள நூல்களைச் சிருஷ்டிக்கும் ஒரு நீண்ட - சில வேளை மிகக் கஷ்டமாகத் தோன்றும் சோதனைக்கு உங்களை உள்ளாக்க நீங்கள் திடங்கொள்ள வேண்டும்.

என்னுடைய சொந்த அனுபவத்தை உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்; மக்களின்மீது நான் கொண்டிருந்த உணர்ச்சிகள் எப்படி மாறின என்பதைக் கூறுகிறேன். நான் பள்ளி மாணவனாயிருந்த காலத்தில், மாணவப் பழக்க வழக்கங்கள் என்னைப் பற்றி நின்றன. அதாவது, எனது மாணவ சகாக்களுக்கு எதிரே, என்னுடைய சாமான்களை ஒரு மூங்கில் கழியில் சுமந்து செல்வதென்றால், எனக்குப் பரம எரிச்சலாயிருக்கும். மாணவர்கள் நாகரிகம் வாய்ந்தவர்களல்லவா! தங்கள் தோள்களில் எந்தச் சுமையையும் ஏற்றுவது என்ற எண்ணத்தையே அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது! தங்கள் கைகளில் கூட எந்தச் சாமான்களையும் தூக்கிச் செல்வதை அவர்களால் நினைத்துக்கூடப் பார்க்கவும் முடியாது! அந்தக் காலத்தில், படித்த அறிவாளிகள் மட்டுந்தான் சுத்தமான பிறவிகள் என்றும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள் எல்லாம் அசுத்தப் பிறவிகள் என்றும் நான் நம்பியிருந்தேன். ஆகையால், ஒரு அறிவாளியிடமிருந்து உடைகளை நான் இரவல் வாங்குவேனே யொழிய, ஒரு தொழிலாளி அல்லது ஒரு விவசாயி அல்லது ஒரு சிப்பாயிடமிருந்து ஒருக்காலும் இரவல் வாங்கமாட்டேன். ஏனென்றால், இவர்கள் உடை அசுத்த மாயிருக்குமல்லவா!

புரட்சியின்போது, நான் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களிடையே தங்கி வாழ்ந்தேன்; சிறிது சிறிதாக, அவர்களை நான் அறிய முயன்றேன்; அவர்களும் என்னை

படிப்பகம்

padippakam



அறிய முயன்றார்கள். அப்பொழுதுதான் பூர்ஷ்வாப் பள்ளிகளில் எனக்கு ஊட்டப்பட்ட பூர்ஷ்வா - குட்டி பூர்ஷ்வா மனோபாவங் களின் அடிப்படை எண்ணங்கள் ஆட்டங் கொடுக்க ஆரம்பித்தன! அன்றிலிருந்து, திருந்தாத படிப்பாளிகளோடு - தொழிலாளிகள், விவசாயிகள், சிப்பாய்களை நான் ஒப்பிட்டுப் பார்க்கும் போதெல்லாம், அத்தகைய படிப்பாளின் மனம் மட்டுமல்ல, அவர்கள் உடலும் அசுத்தமானது என்று நான் உணர ஆரம்பித்தேன். உலகத்திலேயே பரிசுத்தமான மக்கள், தொழி லாளிகளும் விவசாயிகளும்தான். அவர்கள் கைகளில் புழுதி படிந்திருந்தாலும் அவர்கள் கால்களில் சாணம் ஒட்டிக் கொண்டிருந்தாலும் அவர்கள்தான் பூர்ஷ்வா-குட்டி பூர்ஷ் வாக்களை விடச் சுத்தமானவர்கள். மனோபாவங்களில் ஒரு மாறுதல் வேண்டுமென்று சொல்லும் போது, ஒரு வர்க்கத் திலிருந்து மற்றொரு வர்க்கத்திற்கு மனோபாவத்தை மாற்றிக் கொள்ளுதல் என்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

படித்த வகுப்பாரிடையிலிருந்து வருகின்ற நமது எழுத்தாளர்களும், கலைஞர்களும் தங்கள் நூல்களைப் பொதுமக்கள் வரவேற்க வேண்டுமென்று விரும்பினால், அவர்கள் எண்ணங்களிலும் மனோபாவங்களிலும் இத்தகைய மாற்றத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், பொறுப்பு வாய்ந்த கடமையை அவர்களால் செய்ய முடியாது. ஏனெனில், அவர்களின் நூல்கள் மக்களிடையே ஒரு போதும் பரவாது.

கற்றுக் கொள்வது என்ற பிரச்சினை:- இது, மார்க்சிசம்-லெனினிசம் என்ற கொள்கைகளையும், சமூகத்தையும் ஆராயும் பிரச்சினையாகும். மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் புரட்சி எழுத்தாளன் என்று கருதும் ஒருவன், அதிலும் சிறப்பாகக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு எழுத்தாளன். மார்க்சிசம்-லெனினிசம் பற்றிய பொது அறிவு பெற்றிருக்க வேண்டும். தற்சமயத்திலோ, நமது தோழர்களில் பலர், மார்க்சிசம்-லெனினிசத்தின் முக்கியமான அடிப்படைத்

படிப்பகம்

padippakam



தத்துவங்களைக்கூடப் புரிந்துகொள்ள முயல்வதில்லை. உதாரணமாக, சூழ்நிலைகள்தான் நமது நிலைகள் நிர்ணயிக்கின்றன; வர்க்க - தேசியப் போராட்டத்தின் சூழ்நிலைகள்தான் நமது எண்ணத்தையும், மனோபாவங் களையும் நிர்ணயிக்கின்றன என்பது ஒரு அடிப்படைத் தத்துவம். ஆனால், உண்மையில் இந்தக் கொள்கையை அப்படியே தலைகீழாக மாற்றி விடுகின்றனர் இந்தத் தோழர்கள். 'அன்பு' என்பதிலிருந்துதான் சகலமும் ஆரம்பமாகிறது என்கிறார்கள் அவர்கள். அன்பு என்று சொன்னால் ஒரு வர்க்க சமுதாயத்தில், ஒரு வர்க்கத்தின் மீதுள்ள அன்பு அல்லது வர்க்க - அன்பு என்றுதான் இருக்க முடியும். அப்பியிருந்தும், இந்தத் தோழர்கள், வர்க்க சம்பந்தமற்று நிற்கும் அன்பைத் தேடிப் பிடிக்கப் பார்க்கிறார்கள்; ஸ்தூலமற்ற அன்பு, ஸ்தூலமற்ற சுதந்திரம், ஸ்தூலமற்ற உண்மை, ஸ்தூல மற்ற மனித சுபாவம் போன்றவைகளைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறார்கள் அவர்கள்; இதனால் அவர்கள் பூர்ஷ்வா வர்க்கத்தினால் எப்படி உருவாக்கப் பட்டிருக்கிறார்கள் என்று தெளிவாகிறது. இந்தச் செல்வாக்கை வேரோடு பிடுங்கியெறிந்து விட்டுத் திறந்த மனத்தோடு, மார்க்சிசம்-லெனினிசம் பற்றி ஆராய முற்பட வேண்டும்.

ஜீவகலைகளை எப்படிச் சிருஷ்டிப்பது என்பது பற்றி, எழுத்தாளர்களும், கலைஞர்களும் அதிகம் கற்றுத் தெரிய வேண்டியது உண்மைதான். ஆனால் மார்க்சிசம், லெனினிசம் என்பது ஒரு விஞ்ஞானம்; அதை ஒவ்வொரு புரட்சிவாதியும் கற்றாக வேண்டும்; அதற்கு, எழுத்தாளர்களும் கலைஞர்களும் விதிவிலக்கல்ல. எழுத்தாளர்களும், கலைஞர்களும், நமது சமூகத்தைப்பற்றியும் கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டும். சமூகத்தை ஆக்கும் பல வர்க்கங்களைப் பற்றியும், அவைகளிடையே ஒன்றுக்கொன்று உள்ள உறவுப்பற்றியும், அவைகளின் நிலைகள், போக்குகள், மனோதத்துவங்கள் பற்றியும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தமாதிரிச் சகல அம்சங்களையும் அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டால் தான், அவர்கள் நமது இலக்கியத்திற்கும், கலைக்கும், ஒரு

படிப்பகம்

padippakam



சரியான உருவத்தையும், செழுமையான கருத்தையும் கொடுக்க முடியும்.

இன்று, இந்தப் பிரச்சினைகள் பற்றிச் சில முன்னுரைக் குறிப்புகளை மட்டும் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆயினும், நாம் எல்லோரும் இந்தப் பிரச்சினைகள் பற்றியும், இதனோடு இணைந்த விஷயங்கள் பற்றியும் நன்கு விவாதிப்போம் என்று நம்புகிறேன்.

## கலையும் இலக்கியமும் பொது மக்களுக்கே

தோழர்களே! இந்த மாதத்தில் நாம் மூன்று கூட்டங்கள் நடத்தியிருக்கின்றோம். உண்மையைக் கண்டுபிடிக்க நாம் செய்த முயற்சியில், கட்சி மெம்பர்களும், கட்சியல்லாதவர்களும் பல பேராகச் சேர்ந்து உத்சாகமாக விவாதங்களை நடத்தினோம்; அதில் பிரச்சினையின் பல கோணங்களையும் பரிசீலனை செய்தோம்; இவ்விதமாக, பிரச்சினைகளில் தெளிவு பெறுவதில் நாம் வெற்றி கண்டோம். இலக்கியம்-கலை இயக்கம் முழுவதற்கும் இது மிகவும் பயனுடையதாயிருக்குமென்று நான் நம்புகிறேன்.

ஒரு பிரச்சினையை விவாதிக்கும் போது, உண்மைகளை அடிப்படையாக நாம் கொள்ளவேண்டும்; ஸ்தூலமற்ற விளக்கங்களை அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. புத்த கங்களுக்கு விளக்கம் செய்கிற அடிப்படையில், இலக்கியத்தை யும், கலையையும் நாம் பரிசீலனை செய்ய முற்பட்டால், நாம் தவறான வழியைப் பின்பற்றுகிறோம் என்று அர்த்தம். இத்தகைய விளக்கங்களின் அடிப்படையில், இன்றைய இலக்கிய, கலை இயக்கங்களின் போக்கை நாம் சித்திரிக்க முயன்றால், இவைகளை அளவு கோலாகக் கொண்டு இந்தக் கூட்டங்களில் தெரிவிக்கப் பட்ட பல அபிப்பிராயங்களைச் சீர்தூக்கிப் பார்க்க முயன்றால், அது தவறான வழியைக் கடைப் பிடிப்பதாகும். ஆனால், நாம் மார்க்சிஸ்டுகள் என்பதை மறந்து

படிப்பகம்

padippakam



விடக் கூடாது. பிரச்சினைகளைத் தீர்மானிக்கும் பொழுது, வெளி யதார்த்த நிலைமைகளிலிருந்து தொடங்க வேண்டுமே யொழிய, ஸ்தூலமற்ற விளக்கங்களிலிருந்து தொடங்கக் கூடாது என்று மார்க்சிசம் நமக்குப் போதிக்கிறது. இந்த யதார்த்தங்களைப் பரிசீலனை செய்வதன் மூலம் யோசனைகள், கொள்கைகள், வழிகளை நாம் கண்டு பிடிக்க முடிகிறது. கலை, இலக்கியம் பற்றிய இயக்கத்தைப் பற்றி விவாதிக்கும் போது, இத்தகைய வழிகளை நாம் கையாள வேண்டும்.

இன்று நம் முன்னுள்ள நிலைமை என்ன? கடந்த ஐந்து வருட காலங்களாக ஜப்பானை எதிர்த்து, சீனா போரிட்டுக் கொண்டிருக்கிறது. உலக ரீதியில் ஒரு பாசிச-எதிர்ப்பு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. சீனாவிலுள்ள பெரிய நிலச்சுவான் தார்களும், பெரும் பூர்ஷ்வாக்களும் ஜப்பானை எதிர்க்கும் யுத்தத்தில் ஒரு மந்தமான கொள்கையை அனுஷ்டித்து வருகிறார் கள். ஆனால், அவர்களின் உள்நாட்டுக் கொள்கை ஆக்கிரமிப்பு நிறைந்ததாகும். 1919 மே 4-லிலிருந்து நம்மிடையே ஒரு புரட்சிகரமான இலக்கிய, கலை இயக்கம் இருந்து வருகிறது. இந்த இயக்கத்தில், எத்தனையோ பலவீனங்களும், குறைபாடு களும் இருந்தாலும், கடந்த 23 வருடங்களாக, புரட்சிக்கு இது பெரிதும் உதவியிருக்கிறது. 8-வது திசைப்படையும் புதிய நாலாவது படையும், பல ஜனநாயக ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களை ஏற்படுத்தி இருக்கிறது; இந்தச் சேனைகளில் பல எழுத்தாளர்களும், கலைஞர்களும் சேர்ந்திருக்கிறார்கள்; நமது தளங்களிலுள்ள எழுத்தாளர்கள், கலைஞர்களின் நிலைகளும், கடமைகளும், பொதுவான அரங்கத்தில் உள்ளவைகளினின்றும் அடிப்படை வித்தியாசங்களைக் கொண்டதாகும். யேனான், இதர ஜப்பானிய-எதிர்ப்புத் தளங்களிலுள்ள இலக்கிய, கலை எழுத்தாளர்கள், பல பிரச்சினைகளைக் கிளப்பியுள்ளார்கள். அவைகளைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள்; விவாதித்தும் வருகிறார்கள். இவைகள் தான் மறுக்க முடியாத, உண்மையான சம்பவங்களாகும். இந்த யதார்த்தங்களின் அடிப்படையில்தான், நமது பிரச்சினைகளை நாம் பரிசீலனை செய்ய வேண்டும்.



படிப்பகம்

padippakam



அப்படியானால் நமது பிரச்சினையின் சாரம்தான் என்ன? பொதுமக்கள் பக்கத்தில் எப்படி நாம் சார்ந்து நிற்பது என்பதுதான் அடிப்படையான பிரச்னை என்பதே என் அபிப்பிராயம். இந்தப் பிரச்னையைத் தீர்க்காவிட்டால், அல்லது அது சரியான முறையில் தீர்க்கப்படாவிட்டால், நமது எழுத்தாளர்களும், கலைஞர்களும் தங்களுடைய சுற்றுச் சார்புக்குள் தங்களைப் பொருத்திக் கொள்ளவே முடியாது. அவர்கள், கடமைகளையும் பூர்ணமாக நிறைவேற்றவும் முடியாது; ஏனெனில், எண்ணற்ற தகராறுகளில் வெளிப்படை யாகவும், உள்ளுக்குள்ளும் அவர்கள் சிக்க நேரிடும்.

இந்தக் கேந்திரமான பிரச்சினையைச் சுற்றித்தான், எனது விவாதம் இருக்கும்; ஆனால் இதற்குச் சம்பந்தப்பட்ட பல விஷயங்களையும் நான் குறிப்பிடுவேன்.

முதலாவது, நமது இலக்கியமும், கலையும் யாருக்காகச் சிருஷ்டிக்கப்படுகிறது என்பதைப் பார்ப்போம். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், பல ஜனநாயக ஜப்பானிய-எதிர்ப்புத் தளங்களில் உள்ள நமது எழுத்தாளர், கலைஞர் தோழர்களால், இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாகவும், ஆகையால் மேற்கொண்டு எந்த விவாதமும் அவசியமில்லை என்றும் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. நமது தோழர்களில் பலருக்கு இதற்குரிய சரியான பரிகாரம் தெரியாது. இதன் விளைவாக, அவர்களது உணர்ச்சிகள், அவர்கள் எழுதியுள்ள நூல்கள், அவர்கள் செயல்கள், இலக்கியம், கலைக் கொள்கை பற்றிய அவர்களது அபிப்பிராயங்கள் எல்லாம் மக்களின் தேவைகளுக்கும், யதார்த்தமான போராட்டத்தின் கோரிக் கைகளுக்கும் ஒத்ததாயில்லாது, அநேகமாக வேறுபட்டதாக வேயிருக்கின்றன. நமது எழுத்தாளர்கள், கலைஞர்கள் அரங்கத் திற்குள், சில தற்காலிக சந்தர்ப்பவாதிகளும், உளவாளிகளும், எதிரியாலும், கோமிண்டாங் ரகசிய இலாகாவினாலும் நுழைக்கப்பட்டிருப்பதைச் சந்தேகமின்றிக் காணலாம்; அதே சமயத்தில் இவர்கள் நீங்கலாக, கம்யூனிஸ்ட் கட்சி, 8-வது

படிப்பகம்

padippakam



திசைப்படை புதிய நாலாவது படைகளில் விடுதலைக்காக நடக்கும் மகத்தான போராட்டத்தில் பங்கு கொள்வதற்காகச் சேர்ந்துள்ள பல அறிவாளிகளும், எழுத்தாளர்களும், கலைஞர்களும், பொதுவாக இதர கலை, இலக்கிய ஊழியர்களும், இவர்களெல்லாம் ஒரு பொது லட்சியத்திற்காக உழைப்பவர்களாகும். இவர்களது முயற்சிகளினால்தான், நமது இலக்கியம், நமது நாடக மேடை, நமது இசை, நமது கலை இவையெல்லாம் வெகுவாக முன்னேறியிருக்கின்றன. யுத்தம் ஆரம்பிப்பதற்குப் பிறகுதான், பலர் செயல்களிலே ஈடுபட ஆரம்பித்தார்கள். இன்னும் பலர், யுத்தத்திற்கு முன்பே புரட்சிகரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். அதன் காரணமாக, பல கடுமையான-வேதனை விளைவிக்கும் சோதனைகளுக்கு உள்ளானார்கள். அவர்களது செயல்களும், நூல்களும், பொதுமக்கள் எண்ணங்களில் ஒரு புதிய அனுபவத்தை ஏற்படுத்தியது.

அப்படியானால், இந்தத் தோழர்களில் சிலர் இலக்கியமும் கலையும் யாருக்காகச் சிருஷ்டிக்கப்படுகிறது என்பதில் தெளிவில்லாதவர்களாயிருக்கிறார்களென்று ஏன் நாம் சொல்லுகின்றோம்? 'புரட்சிகரமான கலையும், இலக்கியமும், பொது மக்களுக்காக சிருஷ்டிக்கப்படவில்லை; சுரண்டுகின்ற, அடக்கி ஒடுக்குகின்ற வர்க்கங்களுக்காகத் தான் சிருஷ்டிக்கப்படுகின்றன' என்று அவர்கள் நம்புவதாக இருக்கலாமோ?

சுரண்டுபவர்களுக்கும், அடக்கி ஒடுக்குபவர்களுக்கும் ஒரு நிலப்பிரபுத்துவ இலக்கியமும், கலையும் இருக்கிறது; அது நிலச்சுவான்தார் வர்க்கத்திற்குச் சேவை புரிகிறது; அது சீன நிலப்பிரபுத்துவ காலத்தில் ஆண்ட வர்க்கத்துக்குச் சொந்தமானது; ஆனால் அது இன்னும் ஓரளவுக்குச் செல்வாக்குடன் விளங்குகிறது. பூர்ஷ்வா வர்க்கத்திற்குச் சேவை செய்யும் இலக்கியமும், கலையும்-முதலாளித்துவ இலக்கியமும், கலையும்-வேறு இருக்கிறது. லூசூன் கண்டனத்துக்குள்ளான லியாங் ஷீ சூ போன்ற எழுத்தாளர்கள் இலக்கியமும், கலையும்

படிப்பகம்

padippakam



வர்க்க வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்டது என்று சாதிக்கின்றனர். வாஸ்தவத்தில், இந்த எழுத்தாளர்கள் எல்லாம் பூர்ஷ்வா இலக்கியம், கலை இவற்றிற்குக் கட்டியம் கூறுகிறார்கள்; பாட்டாளி வர்க்கக் கலை, இலக்கியத்தை எதிர்க்கிறார்கள். இதுபோக, இன்னும் ஏகாதிபத்திய நலன் களுக்குக் கட்டியங் கூறும் இலக்கியமும், கலையும் இருக் கின்றது; ஆகவே இது ஒரு அடிமைக் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதால், அவைகளை அடிமை இலக்கியம், கலை என்று அழைக்கலாம். இந்த அடிமைக் கலாச்சாரத்தின் பிரதிநிதிகள், செள சோ ஜென், சாங் சீ-பீங் போன்ற எழுத்தாளர்கள். இதுபோக, வேறொரு விதமான கலை, இலக்கியமும் இருக்கின்றது-ரகஸ்ய இலாகாவில் சிருஷ் டிக்கப்பட்டது இது. 'மிகவும் புரட்சிகரமாக'த் தோன்றும் இந்த இலக்கியம், மேலே கூறப்பட்ட மூன்று ரகங்களில் ஒன்றின் சாரமாகவே யதார்த்தத்தில் காணப்படுகிறது.

மேலே கூறப்பட்ட ரகங்களில் ஒன்றுக்காக, நமது இலக்கியமும், கலையும் சிருஷ்டிக்கப்படவில்லை. பொது மக்களுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. நாம் ஏற்கனவே சொன்னோம்- சீனாவின் புதிய கலாச்சாரம், இன்றைய வளர்ச்சிக் கட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலுள்ள பொது ஜனங்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்வ எதிர்ப்புக் கலாச்சாரமாகும் என்று. பொது ஜனங்களுக்காகச் சிருஷ்டிக்கப்படுகிற எதுவும், பாட்டாளி வர்க்கத்தின் தலைமை யில் நடந்தாக வேண்டியது அவசியமாகும். பூர்ஷ்வாத் தலைமையில் சிருஷ்டிக்கப்படுகிற எதுவும், பொதுஜனங்களுக் குரியது என்று சொல்லிவிட முடியாது. நமது புதிய இலக்கியமும், கலையும்-இந்தப் புதிய கலாச்சாரத்தைச் சேர்ந்த அங்கங்களும் இதற்கு விதி விலக்கல்ல. நிலப் பிரபுத்துவப் பூர்ஷ்வா வர்க்கங்கள் உபயோகித்த பழைய உருவங்களை உபயோகிக்க நாங்கள் மறுக்கவில்லை; ஆனால் இந்த உருவங்களை நாம் எடுத்துக் கொண்டு, அதற்குப் புதிய மெருகு கொடுத்து, புதிய உள்ளடக்கமும் கொடுக்கின்றோம்; அதனால்,

படிப்பகம்

padippakam



அவை புரட்சி மயமாகி விடுகின்றன; மக்களுக்குச் சேவை புரிகின்றன.

பொதுமக்கள் என்பவர்கள் யார்? நமது ஜனத்தொகையில் 90 சதவிகிதத்துக்கு மேற்பட்டவர்களான தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள், குட்டி பூர்ஷ்வாக்களாகும். ஆகவே நமது இலக்கியமும், கலையும் தொழிலாள வர்க்கத்திற்கு, புரட்சியை வழிநடத்தும் வர்க்கத்திற்கு முதலில் சேவை புரியவேண்டும்; இரண்டாவது புரட்சியில் தொழிலாள வர்க்கத்தின் சிறந்த நேசனாகவும், பெருந்துணையாகவும் விளங்கும் விவசாயி வர்க்கத்திற்குச் சேவை புரியவேண்டும்; மூன்றாவது, நமது போராட்ட சக்திகளின் பிரதான அம்சமான தொழிலாளர்கள் விவசாயிகளின் ஆயுதந் தாங்கிய படைகளுக்கு 8-வது திசைப்படை, புதிய 4-வது படை, இதர மக்கள் சைன்யங்கள்-சேவை புரியவேண்டும்; நாலாவதாகப் புரட்சியின் மற்றொரு நேசனாக நிற்பதும், ஒரு நீண்ட காலத் திட்டத்தில் நம்மோடு ஒத்துழைக்கக் கூடியதுமான குட்டி பூர்ஷ்வாக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். இந்த நான்கு பகுதியான மக்கள்தான் சீன மக்களில் பெரும்பான்மையாகும். இவர்கள்தான் மக்களில் விரிவடைந்த ஜனப்பகுதியாகும். ஜப்பானியர்களை இன்னும் எதிர்த்து நிற்கும் நிலச்சுவான்தார்கள், முதலாளிகளோடும் நாம் ஒத்துழைக்க வேண்டும். ஆனால், பொதுமக்களுக்கு ஜன நாயகத்தை வழங்குவதை அவர்கள் எப்பொழுதும் எதிர்ப் பவர்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்குச் சொந்தமான இலக்கியமும், கலையும் இருக்கிறது; நமது இலக்கியமும், கலையும் அவர்களுக்காக இயற்றப்படுவதல்ல; அவர்களும் நமது இலக்கியத்தையும், கலையையும் ஏற்றுக்கொள்வதில்லை.

விரிவான பொதுஜனப் பகுதியைச் சேர்ந்த மக்களில், நான்குவிதப் பகுதியார்களுக்குத்தான், நமது இலக்கியமும் கலையும் சிருஷ்டிக்கப்படுகிறது. இவர்களில்-தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள்தான் பிரதான முக்கியத்துவம்

படிப்பகம்

padippakam



வாய்ந்தவர்கள். குட்டி பூர்ஷ்வாக்களின் கலாச்சார தரம் உயர்ந்ததாயிருக்கலாம்; ஆனால் இந்தப் பகுதிதான், எண்ணிக்கையிலும் சரி, புரட்சி உணர்விலும் சரி, மிகப் பலவீனமான பகுதியாகும். ஆகவே நமது இலக்கியமும், கலையும் பிரதானமாகத் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களுக்குத்தான் தேவையாகும்; இரண்டாம் பட்சமாகத்தான் குட்டி பூர்ஷ்வா பகுதிக்காகும். இதை மாற்றி நிதானிப்பது தவறாகும்.

கலை அரங்கத் தோழர்களுக்கு! :- இன்னும் சில தோழர்களுக்கு, தங்களது வாசகப் பொதுஜனம் எத்தகைய மக்களைக் கொண்டது என்ற குறிப்பான இந்தப் பிரச்சினயில் தான் தெளிவான முடிவு ஏற்படவில்லை. அவர்கள், தத்துவத்தில் பிசகிவிடுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. இந்தத் தோழர்களில் யாரும், தத்துவத்திலோ, வார்த்தைகளிலோ, குட்டி பூர்ஷ்வாக்களைவிடத் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள் முக்கியத்துவத்தில் குறைந்தவர்கள் என்று நினைக்கவில்லை. ஆனால் இவர்களில் சிலர் அனுபவத்திலும், செயலிலும் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களைவிட, குட்டி பூர்ஷ்வாக்கள் ஏதோ அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கருதி நடக்கவில்லையா? அவர்கள் அப்படிக் கருதி நடப்பதாகவே நான் நினைக்கிறேன்.

படித்த அறிவாளிகளைப்பற்றிச் சிந்திக்கவும், அவர்களின் மனோ தத்துவத்தை ஆராயவும், அவர்க்ளைப்பற்றி வர்ணிக்கவும், அவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்துவிடவும், அவர்களது குறைபாடுகள்ளைச் சிலநேரம் ஆதரிக்கவும் கூடச் செய்வதற்கும், பல தோழர்கள் தங்கள் பெரும்பகுதி நேரத்தைச் செலவிடுகிறார்கள்! இதைச் செய்யும்போது, தங்களையும் இந்தக் குட்டி பூர்ஷ்வாப் படிப்பாளிகளையும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும்படி செய்யவும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களின் தினசரிப் போராட்டங்களில் கலந்து கொள்ளும்படி செய்யவும் தறிவிடுகிறார்கள்; அவர்களைப் படம்பிடித்துக் காட்டவும்,

படிப்பகம்

padippakam



அவர்களுக்குக் கல்வி போதிக்கவும் தவறி விடுகிறார்கள்; நமது தோழர்களில் பலருக்கு, குட்டி பூர்ஷ்வா மனோபாவமிருக்கிறது; அவர்களில் பலர், படிப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகும். ஆகவேதான், அவர்கள் தங்களைப்போன்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அதன் விளைவாக இந்தப் படிப்பாளி வர்க்கத்தைப் பற்றி ஆராயவும், வர்ணிக்கவும் தலைப்பட்டுவிடுவதில் அவர்களுக்கு ஒரு பிரியம் ஏற்படுகிறது. இதே காரியத்தை, பாட்டாளிவர்க்க மனோபாவத்தில் அவர்கள் செய்வார்களானால், அது மிகவும் பயனுடையதாயிருக்கும். ஆனால், அம்மாதிரிச் செய்யப்படவில்லை; அல்லது முழுவதும் செய்யப்படவில்லை. குட்டி பூர்ஷ்வா மனோபாவத்தில் இந்தத் தோழர்கள் ஆராய்வதும், வர்ணிப்பதுமாகக் குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தைப் பிரதிபலிக்கும் நூல்களைச் சிருஷ்டிக்கிறார்கள். இதை, நாம் பல இலக்கிய, கலை நூல்களில் பார்த்திருக்கிறோம்; குட்டி பூர்ஷ்வா மனோபாவங் கொண்ட படிப்பாளிகளிடம் பரம அநுதாபம் காட்டுவதும், சிலசமயம் குட்டி பூர்ஷ்வாக் குறைபாடுகளை அநுதாபக் கண்கொண்டு பார்ப்பதையும், அதற்காகப் பரிந்து பேசுவதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

இத்தகைய தோழர்களுக்கு, தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களிடம் உண்மையான தொடர்பு கிடையாது. அவர்களைப் பற்றிய ஆராய்ச்சியோ, விஷய ஞானமோ இல்லாததாலும், அவர்களிடையே நெருங்கிய நண்பர்கள் அதிகமில்லாததாலும், இந்த பகுதிகளைப் போதிய அளவு வர்ணிக்க அவர்களால் முடியவில்லை. அவர்கள் வர்ணிக்கும் பாத்திரங்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களின் உடையைத் தரித்திருந்தாலும், அவர்கள் அநேகமாகக் குட்டி பூர்ஷ்வா ரூபத்தில் வெளிப்பட்டு விடுகிறார்கள்.

இந்தத் தோழர்கள், சில சமயங்களில் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள் மீதும், அவர்களிடையே இருந்து வரும் ஊழியர்கள் மீதும் அன்பு காட்டலாம். ஆனால் வேறு சில சமயங்களிலும், வேறு சில முறைகளிலும், பொதுஜனங்கள்

படிப்பகம்

padippakam



இவர்களுக்குப் பிடிப்பதில்லை. அவர்களது உணர்ச்சிகளையும், அபிநயங்களையும் அல்லது இன்னும் ஆரம்ப நிலையில் இருக்கின்ற அவர்களுடைய கலை, இலக்கியத்தின் பட்டை போடாத வடிவங்களையும், (சுவரொட்டிச் செய்திகள், சித்திரங்கள், நாடோடிப் பாடல்கள், பாமரக் கதைகள், அவர்கள் வீட்டு மொழி போன்றவை) இவர்கள் அருவருக்கிறார்கள். இத்தகைய அம்சங்களில் கொஞ்சம் அபிமானம் இவர்களுக்கு ஏற்படுவது, அவைகள் விநோதமாகத் தென்படுவதாலோ, அல்லது தங்களது சொந்தச் சிருஷ்டிகளில் அவைகளை விநோதப் பாத்திரங்களாக உபயோகிக்க வேண்டுமென்பதற்காகவோ, அல்லது இத்தகைய கலை, இலக்கிய வடிவங்களின் பிற்பட்ட அம்சங்களை ஆராய முற்படுவதினாலோ தான். வேறு சில சமயங்களில், இத்தகைய கலை, இலக்கியத்தைப் பகிரங்கமாகவே வெறுத்து ஒதுக்குகிறார்கள்; குட்டி பூர்ஷ்வாப் படிப்பாளிகளையும் அவர்களது சண்டப் பிரசண்டங்களையும்தான் விருப்பத்துடன் இவர்கள் ஏற்கிறார்கள்; சில சமயங்களில் பூர்ஷ்வாக்களின் வாய் வீச்சுக்களை ஏற்றுக்கொள்கிறார்கள்; இத்தகைய தோழர்கள், குட்டி பூர்ஷ்வாப் பக்கமுள்ள வேலியின்மீது மிக வசதியாக அமர்ந்து கொண்டுள்ளார்கள்; இன்னும் நாசூக்காகச் சொல்லவேண்டுமானால், இவர்களது மேதாவிலாச ஆத்மாக்கள், குட்டி பூர்ஷ்வா மாளிகையில் உலாவி நடமாடுகின்றன.

இந்தத் தோழர்கள், நமது பொதுமக்கள் என்றால் யார் என்பதுபற்றிய பிரச்சினையை இன்னும் புரிந்து கொள்ளவு மில்லை; ஒரு தெளிவான முடிவுக்கு வந்தாகவுமில்லை. யேனானில் சமீபத்தில் வந்து சேர்ந்துள்ளவர்களில் சிலர் மட்டுமல்ல, போர்முனையிலும், நமது தளங்களிலும், 8-வது திசைப்படை, புதிய நாலாவது படைகளிலும் பல வருடங்களைக் கழித்தவர்களில்கூட இம்மாதிரி உள்ள சிலர் இருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையைப் பரிபூர்ணமாகத் தீர்ப்பதற்கு இன்னும் 8 அல்லது 10 வருடங்கள் பிடிக்கும். ஆனால் எவ்வளவு

படிப்பகம்

padippakam



காலம் பிடித்தாலும் பாதகமில்லை. இந்தப் பிரச்சினையை ஒரேயடியாக, நிரந்தரமாகத் தீர்த்தாக வேண்டும். நமது எழுத்தாளர்களும், கலைஞர்களும் தங்களது அடிப்படைகளை மாற்றிக் கொண்டு, தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள் பக்கமாக, படிப்படியாக நகர்ந்து செல்லவேண்டும்; அவர்களது வாழ்க்கையில் ஊடுருவிப் புகுந்து கொள்ளவேண்டும்; அவர்களது போராட்டத்தில் தீவிரமான பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். மார்க்சிச-லெனினிசத்தையும், சமூகத்தையும் ஆராய்வதிலும் பங்கெடுத்துக் கொள்வதைத் தங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். ஒரு உண்மையான இலக்கியத்தையும் கலையையும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களுக்காகவும், அவர்களுடையதாகவும் சிருஷ்டிப்பதற்கு இதுதான் வழியாகும்.

நமது பொது மக்கள் யார் என்னும் பிரச்சினை, கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினையாகும். இதுவரை நமது தோழர்களிடையே நிலவிவந்த விவாதங்கள், வித்தியாசங்கள், மாறுபாடுகள், வேற்றுமைகள் எல்லாம் இந்தக் கொள்கை அடிப்படைப் பிரச்சினையைச் சுற்றி எழுந்தவையல்ல; இரண்டாந்தரமான பிரச்சினைகளைச் சுற்றியும், கொள்கைகளேயில்லாத பிரச்னைகளைச் சுற்றியும், எழுந்தவையாகும். இந்தக் கொள்கைப் பிரச்சனையின் மீது எந்த விதமான தகராறுமில்லை. ஏனென்றால், இரண்டு பக்கங்களிலும் விவாதிப்பவர்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள் மீது ஓரளவுக்கு ஒரு பொதுவான வெறுப்புணர்ச்சி கொண்டவர்கள். அவர்கள், தங்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள். "ஓரளவுக்கு" என்று நான் ஏன் சொன்னேனென்றால், நமது தோழர்கள் பொது ஜனங்களின் மீது தனிமைகொண்டு நிற்கும் உணர்ச்சியை தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள் மீது மரியாதைக் குறைவைத் தெரிவிக்கும் உணர்ச்சியை-கோமின்டாங் கட்சியார் கையாளுவதைவிட வேறுவிதமான முறையில் காட்டுகிறார்கள். ஆயினும் இத்தகைய போக்குகள், நமது ஊழியர்களிடையே

படிப்பகம்

padippakam



நிச்சயமாகக் காணப்படுகின்றன. இந்த அடிப்படைப் பிரச்னை முடிவுக்கட்டப்படாத வரை, நமது இதர பிரச்சினைகளை நாம் சுலபமாகத் தீர்த்துக் கொள்ள முடியாது.

உதாரணமாக, இலக்கியத்திலும், கலையிலுமுள்ள செக்டேரியனிசம் என்பதும், கொள்கைப் பிரச்சினை சம்பந்தப் பட்டதாகும். இந்தச் செக்டேரியனிசத்தை அழித்தொழிக்க நாம் விரும்பினால், ''தொழிலாளர்கள், விவசாயிகளுக்காக உழையுங்கள்; 8-வது திசைப்படை, புதிய 4-வது படைக்காகப் பாடுபடுங்கள்; பொது மக்களிடம் போங்கள்!'' என்ற ஸ்லோகத்தை எழுப்பி, அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் இந்தச் செக்டேரியனிசத்தை நாம் களைந்தெறியவே முடியாது.

ஒருமுறை லூசூன், ''புரட்சிகரமான கலாச்சார அரங்கத்திற்குள் ஏற்படும் வேற்றுமை, ஒரு பொதுக் குறிக்கோள் இல்லாததால் ஏற்படுவதாகும்'' என்று சொன்னார். இந்தப் பொதுக் குறிக்கோள் என்பது, தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு உழைப்பதாகும்.

அந்தச் சமயத்தில், இந்தப் பிரச்சினை ஷாங்கையில் இருந்தது; இன்று சுங்கிங்கில் இருக்கிறது. அந்த இடங்களில், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதென்பது மிகக் கஷ்டம். ஏனென்றால், புரட்சிகரமான எழுத்தாளர்களும், கலைஞர்களும் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள்; பொதுமக்களை அவர்கள் சுதந்திரமாக நெருங்க முடியாது. நமது பிரதேசங்களில் நிலைமை முழுவதும் வேறுவிதமாயிருக்கிறது. தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களிடம் நெருங்குங்கள் என்று புரட்சிகரமான எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் நாம் உற்சாகப்படுத்துகிறோம். இங்கே, பொதுஜனங்களோடு தாராளமாகக் கலந்து பழகுவதற்கு அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு; ஒரு உண்மையான புரட்சிகரமான இலக்கியத்தையும்; கலையையும் சிருஷ்டிப்பதற்கு அவர்களுக்குச் சர்வ சுதந்திரம் உண்டு. ஒரு பிரச்சினையை தீர்க்க அணுகுவது என்பது,

படிப்பகம்

padippakam



அந்தப் பிரச்சினையைப் பரிபூரணமாக-தீர்க்கமாகத் தீர்ப்பது என்பதற்குச் சமமாகாது.

அதை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக மார்க்சிசம்-லெனினிசத்தையும், சமூகத்தையும் நாம் கற்றறிய வேண்டும். மார்க்சிசம்-லெனினிசம் என்று நாம் சொல்லும்போது, உண்மையான, ஜீவன் நிரம்பிய மார்க்சிசம்-லெனினிசத்தை, மக்களின் வாழ்க்கையிலும், போராட்டத்திலும் ஈடுபடுத்தும் படியான ஒன்றை நாம் குறிப்பிடுகின்றோம். நல்ல அழகான சுத்தப்பதிப்புக்களாக அச்சடிக்கப் பட்டுள்ள புத்தக மார்க்சிச- லெனினிசத்தை நாம் குறிப்பிட வில்லை. புத்தகங்களிலிருக்கும் மார்க்சிச-லெனினிசத்தை நாம் மக்களிடையே கொண்டு போய், அதை ஜீவனுள்ள மார்க்சிச-லெனினிசமாகக் காட்டினால் செக்டேரியனிசத்துக்கு இடமிருக்கவே முடியாது. அப் பொழுதுதான், செக்டேரியனிசம் என்ற பிரச்சினை மட்டுமல்ல, பல இதர பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

## கல்வியும் கலாச்சாரமும்

நமது பொதுமக்கள் யார் என்ற பிரச்சினை தீர்ந்ததும், அடுத்த பிரச்சினை பொதுமக்களுக்காக எப்படி ஒருவர் வேலை செய்வது என்பதுதான். பொதுமக்களின் கலாச்சார தரத்தை எப்படி உயர்த்துவது, அல்லது எப்படிக் கல்வி அளிப்பது என்று நமது தோழர்கள் புரிந்து கொண்டிருக்கும் பிரச்சினையே இது.

கடந்த காலத்தில், நமது தோழர்களில் சிலர் கல்வி சம்பந்தமான பிரச்சினையைப் புறக்கணித்தார்கள், அல்லது குறைத்து மதிப்பிட்டார்கள்; கலாச்சார தரத்தை உயர்த்துவது என்ற பிரச்சினையை அளவுக்கு மீறி மிகைப்படுத்திக் கூறினார்கள், தரத்தை உயர்த்துவதில் நாம் கவனம் செலுத்தத்தான் வேண்டும். ஆனால் அளவுக்கு மீறி அதை வற்புறுத்தக் கூடாது.

நமது பொதுமக்கள் யார் என்ற பிரச்சினைக்குச் சரியான பரிகாரம் கண்டுபிடிக்கத் தவறுவதினால், இந்தப் புதிய பிரச்சினையைப் பரிசீலனை செய்யும்போது, அது மீண்டும் தலை

படிப்பகம்

padippakam



தூக்குகிறது. நாம் யாருக்காக உழைக்கிறோம் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வில்லையானால், தரத்தை உயர்த்தவோ அல்லது பிரச்சாரம் செய்யவோ நமக்குப் பிரமேயம் ஏற்படாது. அவை இரண்டுக்குமுள்ள சரியான உறவைக் கண்டு பிடிப்பதும் முன்னைவிடக் கஷ்டமாகிவிடும். தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களுக்காக நமது இலக்கியமும், கலையும் சிருஷ்டிக்கப்பட வேண்டியதால், நமது கல்விப் பிரச்சாரத்தை அவர்கள் மத்தியிலே செய்தாக வேண்டும்; தரத்தை உயர்த்துவ தென்பதற்கு, அவர்கள் தரத்தை உயர்த்துவது என்றுதான் அர்த்தம்.

அவர்கள் மத்தியிலே நாம் என்ன பிரச்சாரம் செய்யப் போகிறோம்? ஒரு நிலப் பிரபுத்வ தத்துவத்தையா? ஒரு பூர்ஷ்வா தத்துவத்தையா? அல்லது ஒரு குட்டி பூர்ஷ்வா தத்துவத்தையா? இல்லவே இல்லை. தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களின் தத்துவத்தை மட்டுமே நாம் பிரச்சாரம் செய்ய வேண்டும். ஆகவே தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய் களுக்குக் கல்வி பயிற்றும் கடமையை மேற்கொள்ளும் முன்னர், அவர்களை நாம் படித்தறிந்தாக வேண்டும்.

கலைக்கு எது ஜீவாதாரம்? இது, தரத்தை உயர்த்துவதற்கும் பொருந்தும். எதிலிருந்து தொடங்குவது என்பதற்கான ஒரு அடிப்படை நமக்கு இருக்க வேண்டும். உதாரணமாக தண்ணீர் மொள்ளும் ஒரு வாளியை எடுத்துக் கொள்வோம். அதைத் தரையிலிருந்து மேலே தூக்கவில்லையானால், அதை எப்படி ஆகாயத்திற்கு உயர்த்துவது? அதுபோல் இலக்கியம், கலையின் தரத்தை தாம் உயர்த்த விரும்பினால், எந்த அடிப்படையிலிருந்து நாம் தொடங்க வேண்டும்? நிலப் பிரபுத்துவ அளவிலிருந்தா? நிச்சயமாக இல்லை. தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களின் இன்றைய கலாச்சார அளவிலிருந்து நாம் தொடங்க வேண்டும்; இலக்கியம், கலையின் அவர்களது ஆதிகால உருவங்களின் அடிப்படையிலிருந்து தொடங்க வேண்டும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களின் அளவை, நிலப் பிரபுத்வ வர்க்கம், பூர்ஷ்வா, அல்லது குட்டி

படிப்பகம்

padippakam



பூர்ஷ்வா வர்க்கத்தின் அளவுக்கு உயர்த்துவது நம் நோக்கமல்ல. அதற்குப் பதிலாக, அவர்களது சொந்த வழியிலேயே, அவர்கள் வளர்ச்சி பெறும்படி உதவி செய்ய நாம் விரும்புகின்றோம். ஆகவேதான் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களைக் கற்றறிய வேண்டியது நமது கடமையாகிறது.

இந்த விஷயத்தை நன்றாகப் புரிந்து கொண்டால் தான், நமது பொதுமக்கள் யார்? கல்வி, கலாச்சார தரத்தை உயர்த்துவது எப்படி? என்ற பிரச்னைகளை நாம் புரிந்துகொள்ள முடியும். அப்பொழுதுதான், அவர்களது பரஸ்பர உறவைச் சரியாக நாம் நிர்ணயிக்க முடியும். ஆனால் கல்வியைப் பற்றியோ, தரத்தை உயர்த்துவது பற்றியோ, நாம் சிரத்தை காட்டுகிறோமென்றால், அதற்குரிய ஒரு மூலத்தை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். அவைகளின் தரம் எப்படியிருந்தாலும் சரி, பொதுமக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகவும், படம் பிடித்துக் காட்டுவதாகவும் இருக்கும். கலை-இலக்கிய நூல்கள், மனித மூளையின் கலைப்பண்பினால் சிருஷ்டிக்கப்படும் விளை வாகும். ஆகவே, புரட்சிகரமான இலக்கியமும், கலையும், புரட்சிகரமான எழுத்தாளர்கள், கலைஞர்களின் மனத்தில் பிரதிபலித்து உருவாகும் மக்களின் வாழ்க்கைச் சித்திரத்தின் விளைவாகும்.

இலக்கியத்திற்கும், கலைக்கும் மூலப் பொருள்களின் சுரங்க மலைமோல் உதவுவது மக்களின் வாழ்க்கையாகும். அந்த மூலப் பொருள்கள், இயற்கை ரூபத்தில், பட்டை போடாத நிலையில் இருக்கின்றன. ஆனால் அவைகளில் ஜீவன் இருக்கிறது. அவை ஜீவாதார மாணிக்கம் போன்றவைகளாகும். பொய்யும் புனைசுருட்டும் நிறைந்த இலக்கியத்தையும், கலையையும் அவைகள் சந்தி சிரிக்க வைத்துவிடும். ஜீவகளை ததும்பும் இலக்கியத்திற்கும், கலைக்கும் அள்ள அள்ளக் குறையாத விஷயக் குவியலைக்கொண்டுள்ள பொக்கிஷமாக விளங்குவது மக்களின் வாழ்க்கை ஒன்றுதான். அதுதான் பொக்கிஷமேயன்றி, வேறு மூலப் பொருள் உள்ள சுரங்கம் எதுவும் இருக்க முடியாது.

படிப்பகம்

padippakam



''பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கிய, கலை நூல்களும், புராதன வெளிநாட்டு இலக்கியமும், கலையும் மூலங்களில் லையா?'' என்று சிலர் கேட்கலாம். அவைகளையும் மூலப் பொருள்களாகக் கருதலாம்; ஆனால் அவை எல்லாம் இரண்டாந்தர நிலை யுடையன. முதல்தரமான மூலப் பொருள்கள் அல்ல என்பதுதான் அதற்குப் பதில். முதல் தரமான மூலப் பொருள்களுக்குமேல் அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் தலைகீழ்ப் பாடம் படிப்பது போலாகிவிடும். புத்தகங்களும், பிரசுரிக்கப்பட்டுள்ள இதர நூல்களும், மூலப் பொருள்கள் அல்ல; ஊற்றல்ல; ஊற்றிலிருந்து வழிந்தோடிவரும் பொருள் போன்றதாகும். நமது மூதாதையர்களும், அந்நிய நாட்டு எழுத்தாளர்களும், கலைஞர்களும் அவர்கள் காலத்துச் சமூகத்தின் வாழ்க்கை யிலிருந்து பெற்ற இலக்கியம், கலையின் மூலம் அவைகளைச் சிருஷ்டித்து வெளியாக்கினார்கள். அவர்களது நூல்களை நாம் பயன்படுத்தலாம்; ஆனால் அவைகளை விமர்சனக் கண்ணோடு நாம் பயன்படுத்த வேண்டும்; இன்றுள்ள மக்களை நாம் சித்திரிக்கும் கலை, இலக்கியத்திற்கு முன் மாதிரி உதாரணமாகப் பயன்படுத்த வேண்டும். அத்தகைய உதாரணங்களை நாம் பயன் படுத்துகிறோமா, இல்லையா என்பதில் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. அந்த வித்தியாசம் எப்படிப்பட்ட தென்றால், நாகரிகத்திற்கும், காட்டு மிராண்டித் தனத்திற்குமுள்ள வித்தியாசம்; பட்டை போட்டதற்கும், பட்டை போடததற்கு முள்ள வித்தியாசம்; முற்போக்கு அம்சத்திற்கும், சாதாரண அம்சத்திற்குமுள்ள வித்தியாசம்; வேகத்திற்கும், மந்தத் திற்குமுள்ள வித்தியாசம் போன்றதாகும். ஆனால் இயற்கையாக நமது மூதாதையர்கள், அந்நிய எழுத்தாளர்களிடமிருந்து (அவைகள் நிலப் பிரபுத்வ பூர்ஷ்வா வர்க்கங்களிடையேயிருந்து வந்தாலும்கூட) வந்த உதாரணங்களை உபயோகப்படுத்த நாம் மறுக்க முடியாது. ஆனால், அவைகள் உதாரணங்கள் என்பதைத் தவிர, வேறொன்றாக அவைகளைக் கருதுவது கூடவே கூடாது. நிச்சயமாக, அவைகள் (மூலப் பொருளுக்கு) மாற்றாக உபயோகப்படுத்தப்படுவதல்ல; ஏனென்றால், அவைகள் மாற்றாக முடியாது. புராதன அல்லது அந்நிய இலக்கியம்,

படிப்பகம்

padippakam



கலையை விமர்ச்சிக்காமல் அப்படியே ஏற்றுக் கொள்வதும், அதைப்போல் காப்பியடிப்பதும், அவைகளை மாற்றாக உபயோகப்படுத்துவதும், ராணுவம், அரசியல், தத்துவம், பொருளாதாரம் இந்தப் பிரச்னைகளில் இருப்பதைப் போன்ற ஒரு உதவாக்கரைத் தீங்கு விளைவிக்கும் குருட்டு ஸ்லோகக் கொள்கையாக இலக்கியத்திலும், கலையிலும் ஏற்பட்டு விடும்.

ஆகவே, சீனாவின் புரட்சிகரமான, உண்மையான தகுதி வாய்ந்த எழுத்தாளர்களும், கலைஞர்களும், பொதுஜனங்கள் மத்தியிலே புகுந்து உலாவவேண்டும்; அவர்களுக்காக முழு மனதோடு நிபந்தனை எதுவும் விதிக்காமல் தங்களை முழுவதும் ஈடுபடுத்தவேண்டும்; அதிககாலம் அவர்கள் மத்தியில் வாழ வேண்டும்; கொழுந்துவிட்டெரியும் போராட்டத்தில், அவர்களும் கலந்துகொள்ள வேண்டும்; நித்திய ஜீவ ஊற்றாக விளங்கும் ஒரே மூலஸ்தானத்திற்கு அவர்கள் நேரே போய் விசாரணை நடத்தவும், கருத்தூன்றிக் கவனிக்கவும், கற்றறியவும், பலதிறப்பட்டவர்களை, பலதிறப்பட்ட வர்க்கங்களை, பல்வேறு சமூகப்பகுதிகளை, போராட்டத்தின், வாழ்க்கையின் விதவிதமான உயிர் வடிவங்களை-கலை, இலக்கியத்தின் எல்லா இயற்கை மூலங்களையும் பரிசீலனை செய்யவும் முற்பட வேண்டும். அப்பொழுதுதான், அவர்கள் ஜீவ நடைபோடும் சிருஷ்டி முறையைப் பின்பற்றும் வேலையைத் தொடங்க முடியும். இவ்விதமாகத் தான், மூலப்பொருள்களை அவர்கள் செயற்கைப் பொருள்களாக நெய்து முடிக்க முடியும்; கற்றறியும் முறையோடு, ஜீவநடையை இணைக்க முடியும்; இதை விட்டு வேறு முறையை அவர்கள் கையாள முயன்றால், நமது எழுத்தாளர்களும், கலைஞர்களும் தங்களுடைய லட்சியத்தை இழந்து விடுவார்கள். ஏனென்றால், மூலப்பொருள்களை அல்லது அரைகுறையாக முடிந்த பொருள்களைக் கொண்டு அவர்கள் எவ்வாறு சிருஷ்டிக்க முடியும்? அவர்கள் வெறும் களிமண் மூளை படைத்த எழுத்தாளர்கள், கலைஞர்களாகத்தான் இருந்தார்கள். இவர்களை எதிர்த்துத் தான் காலஞ்சென்ற லூசூன் தனது கடைசி தஸ்தாவேஜில், தன் மகனை எச்சரிக்கும் முறையில் அப்பட்டமாக எடுத்தோதியுள்ளார்.

படிப்பகம்

padippakam



இலக்கியத்திற்கும், கலைக்கும் பூரண வடிவங் கொடுப்பதற்கு ஏதுவான ஒரே மூலப்பொருளை இயற்கை அளித்திருக்கிறது. ஆனால், அது கலையை விட செழுமையும், விஷயமும் நிறைந்திருக்கும் உள்ளடக்கத்தைப் பெற்றிருந்தாலும், அந்த இயற்கை வடிவத்தில் மக்கள் திருப்தியடைந்து விடுவதில்லை. அவர்கள் கலையை விரும்புகிறார்கள். ஏன்? இரண்டும் அழகு நிறைந்திருந்தாலும், கலை இலக்கியத்தின் ஜீவ சிருஷ்டி ததும்பும் வடிவங்கள் இயற்கை வடிவங்களை மிஞ்சிவிடுவதோடு, அதைவிட அதிகமாக ஒழுங்குள்ளதாகவும், சுருக்கமாகவும், தத்ரூபமாகவும், எடுத்துக்காட்டாகவும், சர்வ வியாபகமாகவும் அமைந்திருப்பதால்தான்.

உண்மையிலே உயிர் வாழ்கின்ற லெனின், ஒரு நாவலில் ஒரு நாடகத்தில், ஒரு சினிமா படத்தில் வரும் லெனினைவிடத் தீவிரமாக-கவர்ச்சிகரமாகத் தென்படுகிறார். ஆனால் உயிரோடு வாழும் லெனின், நாம் அவரைப் பற்றிய சகல விபரங்களையும் அறிந்து கொள்ளும் ரீதியில், காலையிலிருந்து இரவுவரை, பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது; அதில் சில விஷயங்கள், மற்ற மக்கள் செய்கிற தினசரி மாமூல் நடவடிக்கைகள் மாதிரித்தான் இருக்கும். மேலும், லெனின் உயிர்வாழ்ந்திருந்த பொழுது, லெனினைச் சந்திக்கின்ற வாய்ப்பு வெகு சிலருக்குத் தான் கிடைத்தது; இப்பொழுது அவரது பூத உடல் மறைந்து விட்டதால் அவரை உயிரோடு யாரும் சந்திக்க முடியாது. ஆகவே தான், நாவல்களிலும், நாடகங்களிலும், சினிமா படங்களிலும் வரும் லெனின், உயிரோடு இருந்த லெனினைவிட, சில சாதகங்கள் கொண்டதாய் விளங்குகின்றார்.

புரட்சிகரமான நாவல், நாடகம், சினிமா எல்லாம் வாழ்க்கையின் ஆதரிசம்பெற்ற பல்வேறு ரகப் பாத்திரங்களைச் சிருஷ்டிக்க முடிகிறது. பொது மக்களை உத்சாகப் படுத்தி, சரித்திரத்தை முன்னுக்குக் கொண்டு போக முடிகிறது. உதாரணமாக, வறுமையிலும் அடக்கு முறையிலும் வதங்கி வாடும் பல மக்கள் இருக்கிறார்கள். அதே சமயத்தில், தங்களது

படிப்பகம்

padippakam



சகோதர மனிதர்களைச் சுரண்டி, ஒடுக்கி வாழும் மக்களும் இருக்கிறார்கள். இத்தகைய சமாச்சாரங்கள், பரந்த அளவில் பொதுப் படையாக எங்கும் காணப்படுவதால், இதுதான் சுபாவம் என்று ஜனங்கள் கருதுகிறார்கள். ஆனால் இந்தத் தினசரி சம்பவங்களை, ஒரு முறையான ஒழுங்குப்படுத்தப்பட்ட உருவத்தில் திரட்டி வடித்துத் தரவேண்டியது தான் கலை-இலக்கியத்தின் வேலையாகும். அத்தகைய இலக்கியமும் கலையும், மக்களைச் செயலில் ஈடுபடும்படி தூண்டும்; விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்தும்; ஐக்கியப் படும்படியாக உத்சாக மூட்டி, ஒரு திட்டமிடப்பட்ட போராட்டத்தை நடத்திச் செல்லவும், அதன் மூலம் பொது மக்கள் தங்கள் நிலையை நிர்ணயிக்கும் காரியத்தைத் தாங்களே ஏற்றுக் கொள்ளவும் கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தும். இயற்கை உருவத்தில், இலக்கியமும் கலையும் நிலவி வருமானால், ஜீவன் நிறைந்த வடிவத்தில் அது ஆக்கப் படாமலிருந்தால், இலக்கியமும் கலையும், மேற் சொன்ன பணியை நிறைவேற்ற முடியாது. நமது லட்சியங்களை யெல்லாம் நாம் அடைய முடிந்தாலும், திறமையாகவும் விரைவாகவும் அவைகளை அடைய முடியாது போய் விடும்.

முதலில் கல்வி:- கல்வி விஷயங்களுக்கான இலக்கியமும் கலையும், தரத்தை உயர்த்துவதற்கான இலக்கியமும் கலையும் இரண்டுமே ஜீவ கலையாகும். இவைகளுக்குள்ள வித்தியாசம் தரத்தினளவில்தான். கல்வி விஷயங்களுக்கான இலக்கியமும், கலையும் பட்டைபோடாத வைரம் போன்றவை; ஆகையால் தான், அவைகளை இன்று பொது ஜனங்களால் சுலபமாகவும், சீக்கிரமாகவும் புரிந்து கொள்ள முடிகிறது. தரத்தை உயர்த்து வதற்கான இலக்கியமும், கலையும், மிக ஜாக்கிரதை யாகப் பட்டை போட்டு மெருகேற்றப்பட்ட வைரம் போன்றது. ஆதலால் தான், இன்று அதைப் பொது ஜனங்கள் விரைவாகவும், முழுசாகவும் தங்களதாக்கிக் கொள்ள முடிய வில்லை.

இன்று, பகைவனை எதிர்த்து வெகு மூர்க்கமாகப்



படிப்பகம்

padippakam



போராடவேண்டிய தருணத்தில், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களை எதிர்நோக்கி நிற்கும் அவசர அவசியமான பிரச்சினை, எழுதப்படிக்கத் தெரியாததாகும். நெடுங்காலமாக, நிலப்பிரபுத்வ பூர்ஷ்வா ஆதிக்கத்தின் விளைவாக அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியவில்லை; கலாச்சார உயர்வு பெற வில்லை; அவர்களிடையே உடனடியாக ஒரு கல்வி இயக்கத்தைத் தொடங்க வேண்டும்; அவர்கள் சீக்கிரமாகக் கிரகித்துக்கொள்ளுகிற, அவர்களது உடனடித் தேவைகளைப் பெருக்கி பூர்த்திசெய்கிற கலை, இலக்கிய நூல்களையும், அத்தகைய கலாச்சார அறிவு வேலையையும் தொடங்க வேண்டும். இத்தகைய இயக்கம் அவர்களது போராட்ட உணர்ச்சியைப் பெருக்கி, இறுதி வெற்றியில் அவர்களுக்குள்ள நம்பிக்கையை, அதிகரிக்கச் செய்யும். அவர்களது ஐக்கிய உணர்ச்சியைப் பலப்படுத்தி, எதிரியை முறியடிப்பதற்கு, அவர்களை ஒரே மனத்தினராய்-ஒரே உள்ளத்தினராய் ஆக்கவும் அது உதவும்.

அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய பிரதான கடமை, ''பின்னல் வேலையில் பூவேலைப்பாடுகள் போட்டுத் தருவதல்ல''; ''குளிர் நிறைந்த இடத்துக்கு, குளிர்காய நிலக்கரி அனுப்பி'' வைப்பதாகும். ஆகவே, நமது முக்கியமான முதல் கடமை, அவர்களுக்குக் கல்வி அளிப்பதுதான்; அவர்கள் தரத்தை உயர்த்துவது அதற்கு அடுத்ததாகும். கல்வி அளிக்கும் வேலையைக் குறைத்து மதிப்பிடுவதோ, அலட்சியப்படுத்து வதோ மகாப் பெரிய தவறாகும்.

அதற்காக, கல்வி அளிப்பதற்கும் கலாச்சாரத்தை உயர்த்து வதற்கும் இடையே ஒரு திரை கட்டவேண்டுமென்பதில்லை. கல்வி அளிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள், தங்கள் வாசகர்களைவிடத் தரத்தின் அளவில் உயர்ந்தவர்களாக இல்லாதிருந்தால், கல்வி அளிக்கும் இயக்கத்தால் ஒன்றும் பலன் ஏற்படாது. கல்வியின் தரம் அன்றிருந்த மேனி அழியாமல், மாதக்கணக்காய், வருஷக் கணக்காய் இருக்குமானால் ''சிறிய

படிப்பகம்

padippakam



மாட்டிடையன்'' (பல நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட ஒரு மாட்டிடையனின் அதீதச் செயல்களை வர்ணிக்கும் ஒரு சீனப் பாமர நாடகம்) என்ற கர்ண பரம்பரைக் கதைக்கு அப்பால் அடுத்த பாடத்திற்குச் செல்ல முடியாது; அல்லது, ''மனிதன், கை, வாய், கத்தி, பசு, ஆடு'' (சீன பால பாடத்தின் முதல் பாடம்) என்பதற்கு மேல் செல்லமுடியாது. இப்படியிருந்தால் இது கல்விக்கு அழகாகுமா?

கல்வி-கலாச்சார உறவு:- மக்களுக்குக் கல்வி கற்க ஆசைதான்; அத்தோடு, தங்கள் தரம் உயரவேண்டுமென்றும் அவர்கள் விரும்புகிறார்கள். மாதத்திற்கு மாதம், வருஷத்திற்கு வருஷம், தங்களின் தரம் உயரவேண்டுமென்பது அவர்களின் விருப்பம். ஜனங்களிடையே கல்வியறிவு புகுத்தப்படும்பொழுது, அவர்களின் தரமும் உயர்கிறது. இது எங்கேயோ ஆகாயத்திலிருந்து பொத்துக் கொண்டு விழுந்துவிடாது; அல்லது ஒரு அறைக்குள்ளிருந்து தொப்பென்று வெளியே குதித்துவிழும் சம்பவமுமல்ல; கல்வித்துறையில் நாம் செய்யும் பிரயத்தனங்களை அடிப்படையாகக் கொண்டு, இது நடைபெறுவதாகும். கல்வியின் மூலமாகத் தரத்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், அதனோடு கல்வியை எந்த வழியில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதும் நிலைநாட்டப்பட வேண்டும்.

சீனாவில் புரட்சியும், புரட்சிகரமான கலாச்சாரமும் ஒரேடியாக வளர்ச்சி யடையவில்லை; படிப்படியாக வளர்ந்ததாகும். சில இடங்களில் கல்விக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அதன் பயனாகத் தரத்தை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் வேறு சில இடங்களில், கல்விக்குரிய வேலைகளே தொடங்கப்படவில்லை. ஆதலால், இதில் ஒரு இடத்தில் கிடைத்த அநுபவத்தை வைத்துக்கொண்டு, வேறு இடங்களில் நாம் வழி தவறிப்போகாதிருப்பதற்கும், சரியான வழி காட்டுவதற்கும் உபயோகப்படுத்த வேண்டும். இதேமாதிரிதான், சோவியத் நாட்டின் பல அநுபவங்கள் நமது கல்வி சம்பந்தமான

படிப்பகம்

padippakam



வேலைகளிலும், தரத்தை உயர்த்தும் வேலைகளிலும், நமக்கு வழி காட்டிகளாக இருக்கும்.

தொகுத்துக் கூறினால்:- தரத்தை உயர்த்துவது என்பது கல்வியின் அளவைப் பொறுத்ததாகும்; கல்வி சம்பந்தமான வேலைகளை, தரத்தை உயர்த்துவதற்கான முறையில் செய்ய வேண்டும். ஆனால் அதற்காகத் தரத்தை உயர்த்துவதற்கான சகல வேலைகளையும், மற்றவர்களின் அநுபவங்களையே வைத்துக் கொண்டு, அதையே மாதிரியாக எடுத்துக் கொண்டுதான் செய்யவேண்டுமென்பது அவசியமில்லை; ஏனெனில், அது விரும்பத்தகாத பலன்களையே விளைவித்து விடும்.

பொதுஜனங்களுடைய தரம் நேரடியாக உயர்த்தப் பட வேண்டுமென்பது மட்டுமல்ல, ஊழியர்களிடையே தரத்தை உயர்த்துவதன் மூலம் மறைமுகமாகவும் மக்களுடைய தரம் உயர்த்தப்பட வேண்டும். மக்களில் முற்போக்கு அம்சங்கள் படைத்தவர்கள்தான் ஊழியர்கள், பொதுமக்களுக்கு எத்தகைய கல்வியை அளிக்கவேண்டுமென்று நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோமோ, அத்தகைய கல்விப் பயிற்சியை, ஏற்கனவே ஊழியர்கள் பெற்றுவிட்டார்கள். அவர்கள் அதிக வளர்ச்சியடைந்து விட்டதால், பொதுமக்கள் தரத்தின் அளவில் போதிக்கப் படும் கல்வியில், அவர்கள் திருப்திப்பட முடியாது; சிறிய மாட்டிடையன் போன்ற கதைகளை மட்டும் அவர்கள் படித்துவிட்டுத் திருப்தியடைய முடியாது. அதற்கும் உயர்ந்த ரகக் கலை, இலக்கியத்தை அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்விக்க வேண்டும். இதை அலட்சியமாக நினைக்கக் கூடாது.

ஆனால், தற்சமயத்தில் இத்தகைய ஊழியர்கள் மட்டும்தான் உணர்கிறார்கள்; நமது மக்கள் பூராவும் இதன் அவசியத்தை உணரவில்லை. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வது நமது கடமைகளில் ஒன்று; ஆனால் இது ஒன்றுதான் நமது முழுத்திட்டத்தின் அடக்கமல்ல. அல்லது நமது தற்காலத் திட்டத்தின் முக்கியமான சாரமல்ல. நாம் ஊழியர்களுக்காக என்னென்ன செய்கிறோமோ, அவையெல்லாம் பொது

படிப்பகம்

padippakam



ஜனங்களின் நன்மை கருதியும் செய்யப்படுகிறது என்பதையும், அப்பொழுதுதான் ஊழியர்கள் பொது ஜனங்களுக்குக் கல்விபுகட்டி, வழிகாட்ட முடியுமென்பதையும் நாம் உணர வேண்டும். இந்தக் கொள்கையை நாம் மீறி நடந்தால், பொதுமக்களுக்குக் கல்வியூட்டி வழிகாட்டும்படியான ஊழியர்களுக்குத் துணை புரியவில்லையானால், தரத்தை உயர்த்துவதற்காக நாம் செய்யப் போகும் வேலை குறிவைக்காமல் எங்கோ ஆகாயத்தில் அம்பு எய்வதுமாதிரி ஆகிவிடும். ஜனங்களுக்காக உழைக்கிறோம் என்ற நமது அடிப்படைக் கொள்கையிலிருந்து நழுவி விட்டவர்களாவோம்.

தொகுத்துச் சொன்னால் :- மக்களின் வாழ்க்கையில் காணப்படும் கலை, இலக்கியத்திற்குரிய மூலப்பொருள்கள் நமது புரட்சிகரமான எழுத்தாளர்கள் கலைஞர்களால் சேகரிக்கப்பட்டு, சாணைபிடிக்கப்பட்டு, மக்களுக்கான ஜீவகளை ததும்பும் கலை, இலக்கியமாகச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்தக் கலை இலக்கியத்தில் சில, உயர்ந்த ரகமுடையதாயிருக்கின்றன; இவைகள் குறைந்த தரத்திலுள்ள பொதுஜனக் கலை, இலக்கியத்திலிருந்து வளர்ச்சியடைந்ததாயிருப்பதோடு, அதிக வளர்ச்சி நிலையை அடைந்துள்ளவர்களின்-குறிப்பாக ஊழியர்களின் தேவையைப் பூர்த்திசெய்யக் கூடியதாயு மிருக்கின்றன; இன்று மக்களின் விரிந்த பகுதிக்குத் தேவைப்படும் குறைந்த தரத்தில் (கீழ்த் தரமான உணர்ச்சி நிரம்பியதல்ல) உள்ள வெகுஜனக் கலை இலக்கியத்திற்கு, உயர்ந்த தரத்தில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள பொதுஜன இலக்கியமும் கலையும் வழிகாட்டுகின்றன. ஆனால் நமது இலக்கியமும் கலையும், உயர்ந்த ரகமாயிருந்தாலும் அல்லது குறைந்த ரகமாயிருந்தாலும் மக்களின் விரிவான பகுதிக்கு அவைகள் பயன்பட வேண்டும்; குறிப்பாகத் தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களுக்குச் சேவை புரிய வேண்டுமென்பது தான் நமது குறிக்கோளாகும். நமது இலக்கியமும் கலையும், மக்களுக்காகச் சிருஷ்டிக்கப்படுகின்றன; மக்களால் அது உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் கருத்து.

படிப்பகம்

padippakam



கலைஞர்களின் கடமை:- கல்விக்கும் கலாசாரத் தரத்தை உயர்த்துவதற்குமிடையேயுள்ள பரஸ்பர உறவு என்ன என்பதைப் பற்றி நாம் தீர்மானித்து விட்டதால், எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கும்-கல்வி போதிக்கும் ஊழியர்களுக்குமுள்ள சரியான உறவு பற்றிய பிரச்சினையைத் தீர்த்துவிடுவது எளிதாகும்.

நமது எழுத்தாளர்களும், கலைஞர்களும், பிரதானமாகப் பொதுமக்களுக்காக எழுதுகிறார்களே யொழிய, ஊழியர் களுக்காக மட்டும் எழுதவில்லை. அதனால்தான் மாக்சிம் கார்க்கி, தொழிற்சாலைகளின் சரித்திரத்தை ஆக்கினார்; கிராமப்புறப் பத்திரிகை நிருபர் கூட்டத்திற்கு வழிகாட்டினார்; இளைஞர் களுக்குப் போதித்தார். லூசூன், இளம் மாணவர்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வதில் பெரும்பகுதி நேரத்தைச் செலவிட்டார்.

நமது இலக்கிய நிபுணர்கள், பொதுஜனங்களின் சுவரில் ஒட்டும் செய்திப் பத்தரிகைகள் பற்றியும், சேனைக்கும் நாட்டுப்புறங்களுக்கும் உரிய செய்தி நிருபனங்கள் பற்றியும் தங்கள் கருத்தைச் செலுத்தவேண்டும். நமது நாடக நிபுணர்கள், சேனை, கிராமப் பிரதேசங்களிலுள்ள சிறு சிறு நாடகக் கோஷ்டிகள் பற்றித் தங்கள் கவனத்தைத் திருப்ப வேண்டும்; நமது சங்கீத நிபுணர்கள், பாமர சங்கீதத்தில் கவனம் செலுத்தவேண்டும்; நமது கலை நிபுணர்கள், பொதுஜனக் கலையில் சிரத்தை காட்ட வேண்டும். இந்த நிபுணர்கள் எல்லோரும், பொதுஜனங்களிடையே குறைந்த தரத்திலுள்ள கலை, இலக்கியத்தைப் பரப்பி வரும் தோழர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும்.

இந்தத் தோழர்களுக்குத் துணைபுரிந்து வழிகாட்டுவதோடு, அதே சமயத்தில் அவர்களிடமிருந்து கற்றுத்தெரிந்து பொதுஜனங்களைப் பற்றிய பல சமாச்சாரங்களை அறிந்து, அதன் மூலம் தங்கள் அநுபவத்தை வளப்படுத்தி, வளர்ச்சியடைய வேண்டியது இந்த நிபுணர்களின் கடமையாகும். ஜனங்

படிப்பகம்

padippakam



களிடமிருந்து தங்களைத் தனிமைப் படுத்திக்கொண்டு யதார்த்தத்தைப் பார்க்க மறுத்துவிட்டு, தந்தக் கோபுரத்திற்குள்ளே தாளிட்டு உட்கார்ந்துகொண்டு, இம்மாதிரியான விசேஷ சேவையை அவர்கள் செய்ய முயலக்கூடாது. அல்லது ஜீவனும், சாரமும் இல்லாத சக்கைகளைக் குவிக்கவும் கூடாது.

நாம் நிபுணர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்; அவர்கள் சேவை நமக்கு மிகவும் விலை மதித்தற்கரியதாகும். ஆனால் தங்களைப் பொதுஜனங்களோடு ஐக்கியப் படுத்திக் கொள்ளுவதன் மூலந்தான், பொதுஜனங்களின் எண்ணங்களை யும் உணர்ச்சிகளையும் வெளியிடுவதன் மூலந்தான், பொது ஜனங்களின் அபிலாஷைகளை உண்மையாகப் பிரதிபலிப்பதன் மூலந்தான், புரட்சிகரமான எழுத்தாளர்களும், கலைஞர்களும், தலைசிறந்த நூல்களை இயற்ற முடியும் என்பதை அவர்களுக்கு ஞாகப்படுத்த வேண்டும்.

பொதுஜனங்களின் பிரதிநிதிகளாகயிருந்தால்தான், அவர்களுக்கு நீங்கள் கல்வி பயிற்றுவிக்க முடியும். அவர்களின் சிஷ்யர்களானால்தான், நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்க முடியும். பொது மக்களின் எஜமானர்களென்று உங்களை நீங்கள் கருதிக் கொண்டீர்களானால், ''கீழ்ப்பட்டவர்களுக்கு'' மேல் தளத்தில் வீற்றிருக்கும் மேதைகள் என்று உங்களை நீங்கள் கருதிக்கொண்டால், உங்களால் பொது ஜனங்களுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படாது; உங்கள் பாண்டித்தியம் எவ்வளவு மேதா விலாசம் பொருந்திய தாயிருந்தாலும் சரி, உங்கள் நூல்களுக்கும் எதிர்காலம் இல்லாது போய்விடும்.

பிரயோஜனகரத்தன்மை (Utilitarianism):- இந்த நிலையை ''பிரயோஜனகரத்தன்மை'' (Utilitarianism) என்று சொல்லிவிட முடியுமா? (இதற்குமுன் நடந்த கூட்டங்களில் இந்தமாதிரி வேலைகள் ''கல்வி''யின்பாற்பட்டதாகுமேயொழிய, ''கலை'' யென்று சொல்லிவிட முடியாது. இதற்கு ''பிரயோஜன கரத்தன்மை'' என்ற முத்திரை கொடுக்கலாம் என்று சிலர் விவாதித்தார்கள்).

படிப்பகம்

padippakam



பிரயோஜனகரத் தன்மை சம்பந்தப்பட்டமட்டில், உலக இயல்வாதிகள் அதை எதிர்ப்பவர்களல்ல; ஆனால், நிலப் பிரபுத்வ பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வா வர்க்கங்களின் பிரயோஜனகரத் தன்மைக்கு உலக இயல்வாதிகள் கடும் பகைவர்களாவர்; மேலும், உண்மையிலேயே போலிவேஷதாரிகளாக இருந்து கொண்டு, உதட்டளவில் பிரயோஜன கரத்தன்மையைப் பழிப்பவர்களாகிய குறுகிய சுயநலம் படைத்த பிரயோஜனகர வாதிகளுக்கும், உலக இயல் (பொருள் முதல்) வாதிகள் விரோதிகளாவர்.

''உன்னத-பிரயோஜன கரத்தன்மை'' என்று எதுவும் கிடையாது; அல்லது வர்க்க வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்ட பிரயோஜனகரத் தன்மை என்பதாக ஒன்றும் கிடையாது. ஒருவர்க்க சமுதாயத்தில், ஏதாவது ஒரு வர்க்கத்திற்குரிய பிரேயாஜனகரத்தன்மைதான் உண்டு. நாமெல்லாம், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான பிரயோஜனகரவாதிகள். சீன ஜனத்தொகையின் 90 சதவிகித மக்களைக் கொண்ட விரிந்த ஜனப்பகுதியின் நிகழ்கால, எதிர்கால நலன்களை ஒன்றுபடுத்து வதுதான் நமது ஆரம்ப வேலை. ஆகவே, !மது புரட்சிகரமான பிரயோஜனகரத்தன்மை என்பது, ஒரு பரந்த, மிக நீண்ட லட்சியத்தைக் கொண்டது. அரைகுறையான, உடனடியான நலன்களை மட்டும் கொண்ட குறுகிய லட்சியவாதிகள் போன்ற பிரயோஜனகரவாதிகள் அல்ல நாம்.

உதாரணமாக, ஒரு இலக்கியம் - அதை எழுதியவர், அவரது சில நண்பர்கள், இன்னும் அவருக்கு அவ்வளவு நன்றாக நெருங்கிய கூட்டுறவில்லாத ஒரு சிறு கூட்டத்தார் இவர்களால் ரசிக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம்; இது பொதுஜனங்களுக்குத் தேவைப்படாமலிருக்கலாம்; அது அவர்களுக்குத் தீங்கை விளைவித்தாலும் விளைவிக்கலாம். ஆனால் அதை எழுதியவர் அதைப் பொதுமக்கள் மீது திணிக்க முற்பட்டால், பொதுமக்கள் மத்தியில், தன் சொந்த நலன்களுக்காகவும், தன்னைச் சுற்றியுள்ள சிறிய கூட்டத்தின் நலன்களுக்காகவும், பிரச்சார நோக்கங்களுக்காகவும், அதைப்

படிப்பகம்

padippakam



பயன்படுத்த முற்பட்டால் - அதே சமயத்தில், பொதுமக்களைப் பிரயோஜனகரவாதிகள் என்று குற்றஞ்சாட்டினால் அந்த எழுத்தாளன், பொதுமக்களைப் பச்சையாக அவமதிப்பது மாத்திரமல்ல, தன்னைப்பற்றியே அந்த எழுத்தாளனுக்கு ஒரு சரியான நிர்ணயிப்பு இல்லையென்பதையும் அது வெட்ட வெளிச்சமாக்குகிறது.

பெரும்பான்மையான மக்களின் அதிகப்படியான நன்மைக் குரியதாக எது அமைகிறதோ, அதுதான் உயர்ந்ததாகக் கருதப்படும். நீங்கள் எழுதும் கலைச்சித்திரங்கள் ''யான் சூன் பாய் சீய்'' (வசந்தத்தில் பனி பெய்வதுபற்றி வர்ணிக்கும் 2000 வருஷத்துக்கு முந்திய ஒரு பாட்டு) மாதிரி, பிரபுக்கள் மட்டும் ரசிக்க முடிகிறதாயிருக்கும்; ஆனால் மக்கள், ''சியா லீ பா ஜென்'' (அதைப்போல ஒரு பழையகாலத்து நாட்டுப் பாடல் - கீழ்நாட்டிலுள் கிராமத்தில் ஜெக்குவானிலுள்ள ஒரு மனிதனைப் பற்றியது) என்று இன்னும் பாடிக் கொண்டிருப்பார்கள். மக்களுடைய கலாச்சாரத் தரத்தை உயர்த்தாவிட்டால், அதற்குப் பதிலாக, அவர்களின் பிற்பட்ட நிலைக்காக அவர்களைக் குறைகூறுவதைத் தொழிலாகக் கொண்டீர்களானால், நீங்கள் அர்த்தமற்ற குற்றச்சாட்டைச் சுமத்தத் தலைப்பட்டிருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

தரத்தை உயர்த்துவது, நமது கல்வியைப் பெருக்குவது என்ற வழிமுறைகளை ஒன்றுபடுத்துவதுதான் நமது பிரச்சினை. இந்த ஒருமைப்பாடு ஏற்படுத்தப்படாதவரை, உயர்தரமான இலக்கியமும் கலையும் சிருஷ்டிக்கப்படுவது மிகவும் குறுகிய பிரயோஜன கரவாதம் என்ற நிலைக்குத் தான் பொருத்தமாக இருக்கும். உங்கள் சிருஷ்டிகளை, மிக உன்னதமான சுயம்பிரகாசக் கலா சிருஷ்டியென்று நீங்கள் கூரைமேல் நின்று கூறினாலும், அது உங்கள் சுயதிருப்திக்குரிய கலையாக இருக்குமேயன்றி, பொதுமக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அடிப்படையான கொள்கை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வந்த பிறகு-தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களுக்காக

படிப்பகம்

padippakam



எப்படி உழைப்பது என்றும் முடிவுசெய்த பிறகு, இதர பிரச்சினைகளான - நமது நிலை, நமது போக்கு, நமது பொது மக்கள் யார், நமது விஷயம் என்ன என்பது பற்றியும் நாம் தீர்மானித்துவிட்டோம்; அநுகூலங்கள், பிரதிகூலங்கள் பற்றி எப்படி அறிவிப்பது; ஒற்றுமையா அல்லது வேற்றுமையா; பிரயோஜனகர வாதமா அல்லது அதீத பிரயோஜனகர வாதமா; குறுகிய பிரயோஜனகரவாதமா என்ற பிரச்சினையையும் நாம் தீர்மானித்துவிட்டோம்.

இந்த அடிப்படையான கொள்கையை நாம் ஒத்துக் கொண்டோமானால், பிறகு நமது கலாச்சார ஊழியர்களும், நமது கலை இலக்கியப் பள்ளிகளும், நமது கலாச்சார வெளியீடுகளும், நமது கலாச்சார ஸ்தாபனங்களும், கலை இலக்கியத் துறையில் நாம் புரியும் சகலவிதமான நமது நடவடிக்கைகளும், இந்தக் கொள்கையை அநுசரித்துத்தான் இருக்க வேண்டும். இந்தக் கொள்கையிலிருந்து இம்மியும் விலகினால், அது தவறாகும்; இந்தக் கொள்கைக்கு விரோதமாக இருக்கும் எதுவும் திருத் தப்பட வேண்டும்.

## கலையும் அரசியலும்

ஆகவே, நமது இலக்கியமும், கலையும் பொதுமக்க ளுக்குப் பயன்படும்படியாக இருக்கவேண்டுமென்பதை நாம் உணர்ந்து கொள்வதால், அதற்குமேல் ஒருபடி முன்னே போய் விவாதிக்கலாம்: - (1) கட்சியின் இலக்கியம், கலை சம்பந்தமான வேலைக்கும், கட்சியின் வேலை முழுவதற்கும் உள்ள உறவு பற்றிய உள்-கட்சிப் பிரச்சினை. (2) கட்சிக்கு வெளியே யுள்ளவர்களுடன் நமது உறவுகள் பற்றிய பிரச்சினை; அதாவது, கட்சி எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கும், கட்சியைச் சேராத எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கும் இடையேயுள்ள உறவு; அதாவது கலை, இலக்கிய அரங்கத்தில் ஒரு ஐக்கிய அணி ஏற்படுத்துவதற்குரிய பிரச்சினை.

முதல் பிரச்சினையைக் கவனிப்போம். எல்லாக் கலாச் சாரமும், அல்லது இன்றைய சகல இலக்கியமும் கலையும், ஒரு

படிப்பகம்

padippakam



குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்ததாகும்; ஒரு குறிப்பிட்ட கட்சி அல்லது ஒரு குறிப்பிட்ட அரசியல் கொள்கையைச் சேர்ந்த தாகும். கலை, கலைக்காக மட்டுந்தான் என்பதோ, அல்லது வர்க்க வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்டது என்பதோ, அல்லது ஒரு குறிப்பிட்ட கொள்கையை ஆதரித்துப் போராடுபவர்களின் நலன்களுக்கு மேற்பட்டதென்பதோ கிடையாது. இலக்கியமும் கலையும், அரசியலுக்கு எந்தவிதமான தொடர்புமில்லாமல் போவதென்பதோ, அல்லது அரசியலுக்குச் சம்பந்தமின்றித் தனித்திருப்பதென்பதோ இல்லவே இல்லை. அப்படி யதார்த்தத்தில் எதுவும் கிடையாது.

வர்க்கமும், கட்சி வித்தியாசங்களும் நிறைந்த ஒரு சமுதாயத்தில், இலக்கியமும் கலையும், ஒரு வர்க்கத்தையோ, ஒரு கட்சியையோ சார்ந்துதான் நிற்கிறது; அதாவது, ஒரு வர்க்கம் அல்லது கட்சியினுடைய அரசியல் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதோடு, ஒரு குறிப்பிட்ட புரட்சிகரமான காலகட்டத்தின் புரட்சிகரமான கடமையையும் ஏற்றுக் கொள்ளுகிறது. இந்தக் கொள்கையிலிருந்து, இலக்கியமும் கலையும் வழிவிலகிச் செல்லுமானால், மக்களின் அடிப்படைத் தேவைகளிலிருந்தே அவைகள் தங்களைக் கத்தரித்துக் கொள்கின்றனவா என்பது தான் அர்த்தம்.

பாட்டாளி வர்க்கத்தின் இலக்கியமும் கலையும், பாட்டாளிவர்க்கப் புரட்சிகரமான திட்டத்தின் ஒரு அங்கமாகும். லெனின் எடுத்துக் காட்டியமாதிரி, அவைகள் ''யந்திரத்தில் ஒரு ஆணி போன்றவை''யாகும். ஆகவே, இலக்கியத்திலும் கலையிலும் கட்சியின் வேலைபற்றிய பாத்திரம், கட்சியின் புரட்சிகரமான முழுவேலைத் திட்டத்தைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. இந்தக் கொள்கையிலிருந்து பிசகினால், டூயலிசம், புலுரலிசம் (Dualism, Pluralism) என்ற நிலைமையிற் கொண்டு போய்விட்டு, கடைசியாக ''மார்க்சீய அரசியல், ஆனால் பூர்ஷ்வா கலை'' என்று டிராட்ஸ்கி பிரச்சாரம் செய்த கொள்கைகளில் கொண்டுபோய் விட்டுவிடும்.

படிப்பகம்

padippakam



கலை, இலக்கியத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூறுவதை நாங்கள் ஆதரிக்கவில்லை; அதற்காக அவைகளை நாம் குறைத்து மதிப்பிடவும் கூடாது. இலக்கியமும் கலையும், அரசியலுக்கு உட்பட்டவைகளாக இருந்தாலும், அவைகள் அரசியலுக்கு ஒரு பிரமாதமான செல்வாக்கை ஊட்டிவிடுகின்றன. புரட்சிகரமான இலக்கியமும் கலையும், புரட்சிகரமான திட்டத்தின் ஒரு பகுதியாகும். அவைகள், மேலே குறிப்பிட்டது மாதிரி யந்திரத்தில் ஒரு ஆணியாகும். அவைகளின் பிரயோஜனம் பெரியதாக இருக்கலாம் அல்லது சிறிதாக இருக்கலாம்; யந்திரத்தின் இதர பாகங்களோடு ஒப்பிடும் பொழுது, பிரதான பகுதியாக இருக்கலாம்; அல்லது முக்கியமில்லாத பகுதியாக இருக்கலாம்; ஆனால் அவைகள் யந்திரம் ஓடுவதற்கு அவசியமான பகுதிகளாகும்; புரட்சிக்ரமான இயக்கம் முழுவதற்கும், அவைகள் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பகுதிகளாகும். நமக்குக் கலையோ இலக்கியமோ இல்லையென்றால், பொதுவான அளவில் கூட இல்லையென்றால், புரட்சியை நாம் நடத்தியிருக்கவே முடியாது; அல்லது வெற்றி அடைந்திருக்க முடிந்திராது. இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாவிட்டால் அது ஒரு தவறாகும்.

மேலும், இலக்கியமும் கலையும், அரசியலுக்கு உட்பட்டவைகள் என்று நாம் சொல்லும்போது, வர்க்க அரசியல், பொதுமக்கள் அரசியல் என்பதைக் குறிப்பிடுகிறோமேயொழிய, சில அரசியல் வாதிகளின் அரசியல் என்று சொல்லப்படுவதையல்ல. அரசியல் என்றால், அது புரட்சிகரமானதோ - புரட்சி எதிர்ப்புடையதோ இரண்டு எதிரான வர்க்கங்களுக்கிடையே நடக்கும் போராட்டத்தைக் குறிப்பிடுவதேயொழிய, தனிப்பட்ட நபர்களின் நடத்தையைக் குறிப்பிடுவதல்ல. ஒரு தத்துவப் போராட்டமோ, கலை இலக்கியப் போராட்டமோ, அதிலும் குறிப்பாகப் புரட்சிகரமான தத்துவப் போராட்டமோ, புரட்சிகரமான கலை-இலக்கியப் போராட்டமோ, அரசியல் போராட்டத்திற்கு உட்பட்டதாக

படிப்பகம்

padippakam



இருக்கவேண்டும்; ஏனென்றால் ஒரு வர்க்கத்தின், பொது மக்களின் தேவைகளை, அரசியல் மூலமாகத்தான் ஒரு வடிவ மாகத் திரட்டிச் சொல்ல முடியும்.

புரட்சிகர அரசியல், புரட்சிகர அரசியல் நிபுணர்கள் புரட்சிகர அரசியலின் விஞ்ஞானத் தையோ அல்லது கலையையோ கற்று உணர்த்தவர்கள் எல்லாம், பொது மக்களிடையேயுள்ள லட்சக்கணக்கான அரசியல் நிபுணர்களின் தலைவர்களாக மட்டுந்தான் இருக்கமுடியும். அரசியல் நிபுணர்களின் அபிப்பிராயங்களை உருவாக்கித் திரட்டிப் பொதுஜனங்களிடையே பரப்பவும், இந்த அபிப்பிராயங்களைப் பொதுமக்கள் புரிந்து கொள்கிற ரூபத்தில் கொடுத்து, அவர்களைச் செயலில் இறங்குவதற்குரியதாகச் செய்வதுமே இவர்களுடைய கடமையாகும். தங்களை ஞானாசிரியர்கள் என்று நம்பும்படி நடிப்பவர்களும், யாரிடத்திலும் இல்லாத ஒன்று தங்கள் மூலந்தான் உலகத்திற்குக் கிடைக்கப்போகிறது என்று நினைப்பவர்களுமான பிரபுத்வ அரசியல் நிபுணர்களாக இவர்கள் இருக்கக் கூடாது.

இதில்தான், பாட்டாளிவர்க்க அரசியல் நிபுணர்களுக்கும், பணம் படைத்தவர்களின் நிபுணர்களுக்கும் உள்ள அடிப்படை வித்தியாசம் அடங்கிக்கிடக்கிறது; இதில்தான், பட்டாளிவர்க்க அரசியலுக்கும் பணம் படைத்த வர்க்கத்தாரின் அரசியலுக்கு முள்ள அடிப்படை வித்தியாசம் அடங்கிக் கிடக்கிறது. இந்த விஷயத்தைப் புறக்கணித்துவிடுவதோ, அல்லது பாட்டாளிவர்க்க அரசியலையும், அரசியல் நிபுணர்களையும், குறுகிய மனோபாவ முடையதாகவும் - கீழ்த்தரமானதாகவும் கருதி விடுவதோ தவறாகும்.

**ஐக்கிய முன்னணி:-** இலக்கியத்திலும், கலையிலும் ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்கும் பிரச்சினை சம்பந்தமாகக் கவனிப்போம். இலக்கியமும் கலையும், அரசியலுக்கு உட்பட்டதாதலாலும் - இன்று சீன அரசியலின் கேந்திரமான பிரச்சினை ஜப்பானை எதிர்ப்பது என்பதனால், இலக்கியம்

படிப்பகம்

padippakam



கலைக்காக வேலைசெய்யும் கட்சி ஊழியர்களின் பிரதமமான கடமை என்னவென்றால், கட்சிக்கு வெளியே இருக்கும் சகல எழுத்தாளர்கள், கலைஞர்களையும் (கட்சி அநுதாபிகள், குட்டி பூர்ஷ்வா எழுத்தாளர்கள், கலைஞர்களிலிருந்து, பூர்ஷ்வா, நிலச்சுவான்தார் வர்க்கங்களின் எழுத்தாளர்கள், கலைஞர்கள் வரை) ஒரு ஜப்பானிய எதிர்ப்பு அணியில் ஒன்று திரட்டுவதாகும்.

அவர்களை, ஜனநாயகம் என்ற பிரச்சினையின் பேரிலும், நாம் திரட்டியாக வேண்டும். இந்த நோக்கத்தை இவர்களில் சில எழுத்தாளர்களும், கலைஞர்களும் ஆதரிக்கமாட்டார்கள். ஆகவே, இதில் ஒற்றுமை ஏற்படுவது என்பது மிகப் பெரிய அளவில் இருக்காது. மேலும், எழுத்தாளர்கள், கலைஞர்களை எதிர்நோக்கி நிற்கும் அநுபவ சம்பந்தமானதும், எப்படி அணுகுவது என்பதுமான குறிப்பிட்ட பிரச்சினைகளின்மீது, ஐக்கியத்தை ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். பாட்டாளி வர்க்க யதார்த்த வாதத்தை நாம் ஆதரிப்பவர்கள்; இதில் கூட, சிலர் நம்மோடு ஒத்துப்போகமாட்டார்கள். ஆதலால், இந்தப் பிரச்சினையில் ஐக்கியம் என்பது, ஜனநாயகம் என்ற பிரச்னையில் ஏற்படுவதைவிடக் குறைந்த அளவில் தான் இருக்கும்.

ஒரு பிரச்சினையில் ஐக்கியம் ஏற்படுத்தி விடமுடியும்; அதேசமயத்தில் மற்றொரு பிரச்சினையில் போராட்டமும், விமர்சனமும் செய்யவேண்டியதாயிருக்கும். இந்த இரு பிரச்சினைகளும் வெவ்வேறாகத் தோன்றினாலும், உண்மையில் அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகள். ஆகவே, ஜப்பானை எதிர்ப்பது என்பதுபோன்ற சில பிரச்சினையில் ஐக்கியம் ஏற்படுத்திவிட்டாலும், போராட்டமும், விமர்சனமும் தொடர்ந்து செய்யப்பட வேண்டும். ஐக்கியம் ஏற்படுத்துவது தவிர, ஒரு ஐக்கிய முன்னணியில் போராட்டமும் இல்லை யென்றால், அல்லது போராட்டம் தவிர ஐக்கியம் ஏற்படுத்தும் முயற்சி இல்லையென்றால், கடந்த காலத்தில் நம்முடைய தோழர்களில் சிலர் இழைத்தது போன்ற தவறுகளையே நாமும்

படிப்பகம்

padippakam



திரும்பிச் செய்து கொண்டிருப்போம்; அதாவது வலது சாரி ''சரணாகதிப்படலம்,'' ''வால் பிடித்து நிற்கும் தன்மை'' அல்லது இடது சாரித் தனிமை விரதம், செக்டேரியனிசம் போன்ற தவறுகளைச் செய்து கொண்டிருப்போம். லெனின் சொன்ன மாதிரி, இவைகள் ஒரு வழுக்கல் கொள்கையாகும். இது அரசியலுக்கும் பொருந்தும், கலை இலக்கியத்துக்கும் பொருந்தும்.

குட்டி பூர்ஷ்வா எழுத்தாளர்களும், கலைஞர்களும், இலக்கியம், கலை இவற்றின் ஐக்கிய முன்னணியில், ஒரு முக்கியமான சக்தியாவர். அவர்கள் சிந்தனையிலும், எழுத்திலும், பல பலவீனங்கள் தென்படும். ஆனால் அவர்கள், இதர பகுதிகளைவிடப் புரட்சிக்கு மிகவும் அநுதாபம் காட்டுபவர்கள்; தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர்கள்; அவர்களிடமுள்ள பலவீனங்களை அவர்கள் சமாளிக்கும் முறையில், நாம் அவர்களுக்கு உதவியாக இருக்கவேண்டும்; தொழிலாளர்கள், விவசாயிகள் சிப்பாய்களுக்குகச் சேவைசெய்யும்படி அவர்களை நாம் நம் பக்கம் இழுக்க வேண்டும். இவைகளெல்லாம் மிக முக்கியத்துவம் வாய்ந்த வேலைகளாகும்.

## விமர்சனத்திற்கு ஏது அளவுகோல்?

இலக்கிய, கலை விமர்சனம் என்பது ஒரு பிரதான ஆயுதமாகும். இலக்கிய, கலை வட்டாரங்களில் ஒரு போராட்டத்தை நடத்திக்கொண்டு போகும் அளவிற்கு அந்த ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும். பல தோழர்கள் சரியாக எடுத்துக் காட்டியமாதிரி, இது சம்பந்தமாக நாம் கடந்த காலத்தில் செய்துள்ள வேலைகள் போதாது.

இலக்கிய கலை விமர்சனம், விசேஷமான ஆராய்ச்சி தேவைப்படும்படியான ஒரு சிக்கலான பிரச்சினையாகும். விமர்சனத்தின் அடிப்படை அம்சங்களைப் பற்றிய பிரச் சினைகளை மட்டும், நான் இங்கு ஆராய விரும்புகின்றேன்.

படிப்பகம்

padippakam



தோழர்கள் எழுப்பியுள்ள பல பிரச்சினைகளைப் பற்றியும் சிலர் வெளியிட்ட தவறான அபிப்பிராயங்கள் பற்றியும் விமர்சனம் செய்ய விரும்புகின்றேன்.

இலக்கிய, கலை விமர்சனத்திற்கு இரண்டு அளவுகோல்கள் உண்டு. ஒன்று, அரசியல் ரீதியான, அளவுகோல்; மற்றொன்று, கலை ரீதியான அளவுகோல்.

அரசியல் ரீதியான அளவுகோலின்படி, கலைச்சிருஷ்டி நல்லதாக, அல்லது மற்றதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்லதென்று சொல்லும்படியாக இருக்கிற தென்றால், நமது எதிர்ப்புப் போராட்டத்திற்கும், ஐக்கிய நல்ன்களுக்கும் அது உதவி புரிவதாக இருக்கவேண்டும்; பொது மக்களைத் திரட்டும் பணியில் அது உற்சாக மூட்டவேண்டும்; அது பிற்போக்கை எதிர்த்து, முன்னேற்றத்தைத் துரிதப்படுவதாக இருக்கவேண்டும். அதுபோலவே கலை ரீதியான சிருஷ்டி, மோசமாக அல்லது மற்றதைவிட மோசமாக இருக்கிறது என்றால், பொது மக்கள் மத்தியில் பிரிவையும், பிளவையும் ஏற்படுத்துவதற்குத் தூபம் போடுவதாயிருக்கும்; முன்னேற்றத்துக்குத் தடையாயிருந்து, மக்களைப் பின்னுக்கிழுத்து நிறுத்தி வைப்பதாயிருக்கும்.

இது நல்லது அல்லது மோசமானது என்று தெரிந்து கொள்ள, நோக்கங்களை (தனி நபர்களின் விருப்பு வெறுப்புகளை) அடிப்படையாக வைத்தா, அல்லது பலா பலன்களை (சமூகத்தில் ஏற்படும் உண்மையான அநுபவத்தை) அடிப்படையாக வைத்தா அறிந்து கொள்வது? கற்பனாவாதிகள் நோக்கங்களைத்தான் வற்புறுத்துவார்கள்; பலாபலன்களை மறுப்பார்கள். யாந்திரீகமான லோகாயதவாதிகள் பலாபலன்களை வற்புறுத்துவார்கள்; நோக்கங்களை மறுப்பார்கள். இந்த இரண்டு முறைகளையும் நாம் எதிர்க்கின்றோம்.

நாம், தர்க்க ரீதியான உலக இயல்வாதிகள்; நோக்கமும், பலாபலனும் இணைந்த ஒன்றை நாம் வற்புறுத்துகிறோம். பொது மக்களுக்கு உழைக்க வேண்டுமென்ற நோக்கத்தை, பொது மக்களால் வரவேற்கப்படும் பலாபலனிலிருந்து பிரித்துப்

படிப்பகம்

padippakam



பார்க்க முடியாது. நோக்கமும், பலாபலனும் பொருந்தியிருக்க வேண்டும். தனி நபரின் சுய நலத்தாலோ, அல்லது குறுகிய ஒரு கூட்டத்தாரின் நலத்தினாலோ பாதிக்கப்பட்ட ஒரு நோக்கம் நல்லதல்ல. அதே போலப் பொதுமக்களுக்கு உழைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கம், பொது மக்களால் வரவேற்கப் படுவதும், அவர்களுக்கு நன்மை புரிவதுமான ஒரு பலாபலனை அளிக்கவில்லையென்றால், அதுவும் பயனற்றதாகும்.

ஒரு எழுத்தாளனின் தனிப்பட்ட உத்தேசத்தைப் பரிசீலனை செய்யும்போது, அதாவது அவனது நோக்கம் சரியானதா அல்லது நல்லதா என்று நிர்ணயிக்கும்போது, அவன் சொல்லும் உத்தேசத்தை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளக் கூடாது; அதன் பலாபலனை அதன் மூலம் அவன் நடத்தை (அவன் சிருஷ்டித்தது) சமூகத்திற்கும், பொதுமக்களுக்கும் எப்படிப் பட்டதாகத் தோன்றுகிறது என்பதை நாம் பரிசீலனை செய்யவேண்டும். ஒரு தனிப்பட்ட நபரின் உத்தேசத்தைப் பரீட்சிப்பதற்கு அளவுகோல் சமூக அநுபவமாகும். ஒரு நோக்கத்தைப் பரீட்சிப்பதற்கு அளவுகோல், அதனால் விளையும் பலாபலனாகும்.

கலை, இலக்கியத்தை நாம் விமர்சனம் செய்வது, செக்டேரியன் முறையில் இருக்கக்கூடாது. எதிர்ப்பு யுத்தம், தேச ஒற்றுமையின் பொதுவான கொள்கைளை மனதில் வைத்துக் கொண்டு, சகல விதமான அம்சங்களும் பொருந்திய அரசியல் போக்கைப் பிரதிபலிக்கும் சகல இலக்கியங்களையும், கலையையும் நாம் புறக்கணிக்கக்கூடாது. ஆனால் அதே சமயத்தில் கொள்கையில் நாம் உறுதியாயிருக்க வேண்டும்; நாம் விமர்சனம் செய்யும்பொழுது, நமக்குரிய ஸ்தானத்தில் நின்று செய்யவேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், தேச, விஞ்ஞான, பொது மக்கள், கம்யூனிஸ்ட் நலன்களுக்கு எதிரான அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கும் சகல இலக்கிய கலா சிருஷ்டிகளையும் நாம் வன்மையாக விமர்சனம் செய்ய வேண்டும். ஏனென்றால், இத்தகைய இலக்கிய கலா சிருஷ்டிகளின் நோக்கங்களும், பலாபலன்களும், நமது எதிர்ப்பு-



படிப்பகம்

padippakam



யுத்தத்திற்குக் குந்தகம் விளைவித்து, நமது தேச ஐக்கியத்தையும் சிதறடித்து விடுகிறது.

கலாரீதியான அளவுகோலின்படி பார்த்தோமானால், உயர்ந்த கலாரீதியான குணாம்சம் நிறைந்த சகல நூல்களும் நல்லவை, அல்லது மற்றவைகளோடு ஒப்பிடும்போது நல்லவையாகும்; ஆனால் மட்டரகக் கலாம்சம் நிறைந்த நூல்கள் மோசமானவை, அல்லது மற்றவைகளோடு ஒப்பிடும்போது மோசமானவையாகும். ஆனால் இந்த அளவு, ஒரு கலை நூல், சமூகத்திற்கு எத்தகைய பலாபலனை அளிக்கிறது என்பதைப் பொறுத்தும் இருக்கிறது. தங்களது நூல்களைச் சிறந்தவையல்ல என்று கருதும் சில எழுத்தாளர்களும், கலைஞர்களும் இருக்கிறார்கள்.

அதோடு, கலா ரீதியான நூல்கள்-பல ரகங்கள், பல விதங்களில் இருப்பவற்றைத் தாராளமாகப் போட்டியிடும்படி நாம் விட்டுவிட வேண்டும். அதே சமயத்தில், அந்த நூலை விஞ்ஞான ரீதியான, கலாரீதியான அளவு கோல் மூலம் விமர்சனம் செய்யவேண்டும்; எதற்காக வென்றால், கலையை மட்ட ரகத்திலிருந்து உயர்ந்த ரகத்திற்கு உயர்த்தவும், மக்களின் போராட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத கலையைப் (அது மிக உயர்ந்த ரகமாயிருந்தாலும் சரி) பூர்த்தி செய்யும் படியான கலையாக மாற்றுவதற்குமாகும்.

இப்பொழுது ஒரு அரசியல் அளவுகோலும், கலா ரீதியான அளவு கோலும் உண்டு என்று நமக்குத் தெரியும். அப்படியானால், அவைகளுக்கிடையே யுள்ள சரியான உறவு என்ன? அதே சமயத்தில் அரசியல் என்பது கலையல்ல, பொதுவாக உலகக் கண்ணோட்டம், அதே சமயத்தில் கலாரீதியான சிருஷ்டி முறைகளைக் கொண்டதல்ல. ஸ்தூலமற்ற, சலனமே ஏற்படாமலிருக்கும் அரசியல் அளவுகளையும் நாம் நிராகரிப்பதோடு, ஸ்தூலமற்ற, சலனமே ஏற்படாமலிருக்கும் கலாரீதியான அளவுகளையும் நாம் நிராகரிக்கிறோம். வெவ்வேறு வர்க்க சமுதாயங்கள் வெவ்வேறு அரசியல் காலரீதியான அளவுகளைக் கொண்டிருக்கின்றன;

படிப்பகம்

padippakam



எப்படி ஒரு வர்க்க சமுதாயத்தில் வெவ்வேறு வர்க்கங்கள் இருக்கின்றனவோ அந்தமாதிரி. ஆனால், எந்த ஒரு வர்க்க சமூகத்திலும், அல்லது அந்தச் சமூகத்திலுள்ள எந்த ஒரு வர்க்கத்திலும், அரசியல் அளவுகள்தான் பிரதானமானவை; கலாரீதியான அளவுகள் அதற்கு அடுத்தவைதான்.

பாட்டாளி வர்க்கத்தின் கலை இலக்கியத்தை, அவைகளின் கலாம்ச அளவு எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் சரி, அந்த இலக்கியத்தையும் கலையையும், முதலாளி வர்க்கம் ஒதுக்கி விடுகிறது. அதேபோல, பட்டாளி வர்க்கமும், பூர்ஷ்வா இலக்கியம் கலையின் பிற்போக்குத்தனம் நிறைந்த அரசியல் சாரத்தை ஒதுக்கிவிட்டு மிகவும் சர்வ ஜாக்கிரதையாக, அவைகளிலுள்ள கலாம்சத்தை மட்டும் கிரகித்துக் கொள்ள வேண்டும். முழுக்க முழுக்கப் பிற்போக்கு இலக்கியத்திலும், கலையிலும்-பாசிஸ்ட்டுகளின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நூல்களில்-கலாம்சம் ஓரளவுக்கு நிறைந்திருப்பது சாத்தியம். ஆயினும், அத்தகைய கலாம்சம் நிறைந்ததாகப் பிற்போக்காளர் களின் நூல்கள் இருந்தாலும், மக்களுக்கு அது சொல்லமுடியாத தீங்கை விளைவிக்குமாதலால், அவைகளை நிச்சயமாக ஒதுக்கித் தள்ளவேண்டும். சுரண்டுகிற வர்க்கங்களின்-அவர்களின் நசிவு சகாப்தத்தில்-சகல இலக்கியத்திலும் கலையிலும் ஒரு பொது அம்சத்தைக் காணலாம்; அதாவது, அவர்களது பிற்போக்கு அரசியல் உள்ளடக்கத்திற்கும், அவர்களது கலாம்ச உரு வத்திற்கும் இருக்கும் முரண்பாடாகும்.

அரசியலுக்கும், கலைக்கும் இடையே ஐக்கியம் உண்டாக வேண்டும் என்று நாம் கோருகிறோம்; உருவத்திற்கும், உள்ளடக்கத்திற்கும் இடையே இணக்கம் இருக்கவேண்டும் என்று நாம் கோருகிறோம்; புரட்சிகரமான அரசியல் உள்ளடக்கமும், மிக உன்னதமான காலம்ச ரூபமும் பக்குவமாகப் பிணைந்து இருக்கவேண்டும். கலாரீதியான குணாம்சம் நிறைந்ததாயில்லாத கலை, இலக்கிய சிருஷ்டிகள், அவைகள் அரசியல் ரீதியாக எவ்வளவு முற்போக்கு வாய்ந்தவைகளாயிருந்தாலும் சரி, அவைகள் பிரயோஜன மற்றவைகளாகும்.

படிப்பகம்

padippakam



ஆகவே, தீங்கு விளைவிக்கும், பிற்போக்கு உள்ளடக்கம் நிறைந்த கலா சிருஷ்டிகளை மட்டும் நாம் வெறுக்கவில்லை; ''சுவரொட்டி விளம்பரம் மாதிரி-கோஷம்போடுவது போன்ற நடையிலுள்ள'' உள்ளடக்கம்தான் முக்கியம், உருவம் முக்கியமே இல்லை என்று வற்புறுத்தும் கலாசிருஷ்டிகளையும் நாங்கள் வெறுக்கிறோம். கலை இலக்கியப் பிரச்சினைகளில், இத்தகைய இரண்டு முனைகளிலும் நாம் போராட வேண்டும்.

நம் தோழர்களில் பலரிடம், இந்த இரண்டு குறைபாடுகளும் காணப்படுகின்றன. சிலர், கலாரீதியான குணாம்சத்தை உயர்த்துவதில் போதிய கவனம் செலுத்த வேண்டியது அவ சியமாக இருக்க, கலாரீதியான குணாம்சத்தைப் புறக்கணிக்க முயல்கின்றனர். ஆனால் அதைவிட இன்று முக்கியமானது என்னவென்றால், அவர்களிடம் அரசியல் குணாம்சம் இல்லை என்ற குறைபாடுதான். பல தோழர்களிடம், அரசியல் பொது அறிவு இல்லவே இல்லை; அதன் விளைவாகப் பலவித மான-குழப்பமான கருத்துக்களை அவர்கள் கொண்டிருக்கிறார் கள். யேனானில் நிலவிவரும் கருத்துக்களுக்கு உதாரணங்கள் சொல்லுகிறேன்.

''மனித சுபாவத்தின் தத்துவம்'' - மனித சுபாவம் என்று ஒன்று உண்டா? ஆம், நிச்சயமாக உண்டு; ஆனால் ஸ்தூலமான மனித சுபாவம் தான் உண்டு. ஒரு வர்க்க சமுதாயத்தில் மனித சுபாவம், வர்க்க குணாம்சங்களைப் பெற்றிருக்கிறது; வர்க்க வித்தியாசங்களுக்கு மேற்பட்ட - ஸ்தூலமற்ற மனித சுபாவம் என்பது கிடையவே கிடையாது.

பாட்டாளி வர்க்க மனித சுபாவ மென்றுதான் நாம் குறிப்பிடுவோம்; ஆனால் பூர்ஷ்வாக்களும், குட்டி பூர்ஷ் வாக்களும், அவரவர்களுடைய வர்க்கங்களின் மனித சுபாவத்தையே எடுத்துக் காட்டுவார்கள். அதைப் பல வார்த்தை களில் அவர்கள் கூறவில்லையானாலும், அவர்களுடையதுதான் ஒரே மனித சுபாவம் என்பது அவர்களது அபிப்பிராயம். ஆகவே அவர்கள் கண்களில், பாட்டாளி வர்க்க மனித சுபாவம் என்பது,

படிப்பகம்

padippakam



மனித சுபாவத்திற்கு முரணானது என்று படுகிறது. இம்மாதிரி நினைப்பவர்கள், யேனானிலும் சிலர் இருக்கின்றார்கள்; மனித சுபாவத்தின் தத்துவம் என்று சொல்லப்படுகிறதே, அதை, அவர்கள் கலை இலக்கியத்தின் தத்துவத்திற்கு அடிப்படையாக எடுத்துக் காட்டுகிறார்கள். இது முழுக்க முழுக்கத் தவறு.

சகல இலக்கியத்திற்கும், கலைக்கும், மூலாதாரம் அன்பு. மனித சமூகத்தின் மீது அன்பு - அன்பு என்பது ஆரம்பக் கட்டமாக இருக்கலாம்; ஆனால், அதைவிட முக்கியமான மற்றொரு அடிப்படையான ஆரம்பக் கட்டம் இருக்கிறது. புற அனுபவத்தின் விளைவாகக் கிடைத்த ஒரு கோட்பாடுதான் அன்பு என்பது. அடிப்படையாகப் பார்க்கப் போனால், ஒரு அபிப்பிராயத்திலிருந்து நாம் ஆரம்பிக்க முடியாது; புற அனுபவத்திலிருந்து நாம் தொடங்க வேண்டும்.

எழுத்தாளர்களும், கலைஞர்களுமாகிய நாம், நமது அறிவைப் பின்னணியாக வைத்துக்கொண்டு பார்த்தால், பாட்டாளி வர்க்கத்தின் மீது கொள்ளும் அன்பானது, பாட்டாளி வர்க்கத்தின் மீது திணித்திருக்கும் அதே விதியைத்தான் சமூகம் நம் மீதும் திணித்திருக்கிறது. நமது வாழ்வும், பாட்டாளி வர்க்கத்தின் வாழ்வோடு பின்னப்பட்டிருக்கிறது என்ற உண்மைகளிலிருந்துதான் தளிர்விடுகிறது. ஆனால், ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் மீது நாம் கொண்டுள்ள வெறுப்பு, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளால் நாம் ஒடுக்கப்படுவதால் விளைவதாகும். உலகத்தின் எந்த இடத்திலும், காரணமில்லாமல் அன்பு ஏற்படுவது கிடையாது; அல்லது காரணமில்லாமல் வெறுப்பு ஏற்படுவதும் கிடையாது.

மனித சமூகத்தின் மீது அன்பு என்று சொல்லும் போது, மனித சமுதாயம் இரண்டு வர்க்கங்களாகப் பிரிந்த பிறகு, சகலவற்றையும் தழுவி நிற்கும் அன்பு என்பது ஒன்று கிடையாது. ஆளும் வர்க்கங்கள், எங்கும் பரந்த அன்பை எடுத்து ஓதுகிறார்கள். கன்ஃபூஷியஸ் எடுத்தோதினார்; டால்ஸ்டாயும் அவ்வாறு சொன்னார். ஆனால் ஒருவர்கூட, அதை அநுபவத்தில்

படிப்பகம்

padippakam



காட்டவில்லை; ஏனென்றால், ஒரு வர்க்க சமுதாயத்தில் அது அடைய முடியாத காரியமாகும்.

மனித சமுதாயத்தின் மீது உண்மையான அன்பு காட்டுவது எப்பொழுது அடைய முடியுமென்றால், எதிர் காலத்தில், உலகம் முழுவதிலும் வர்க்க வித்தியாசங்கள் என்று ஒழிக்கப் படுகின்றனவோ, அன்றுதான். சமுதாயத்தைக் கூறுபோட்டுப் பிரிப்பதற்கு வர்க்கங்கள் பயன்படுகின்றன; வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டுவிட்டால், சமுதாயம் மறுபடியும் ஒன்று பட்டுவிடும். அப்பொழுதுதான், மனித சமுதாயத்தின் மீது அன்பு தழைத்தோங்கும்; இப்பொழுது அது தழைக்க முடியாது. இன்று, நாம் பாசிஸ்டுகள் மீது அன்பு காட்டமுடியாது; நமது எதிரிகள் பேரிலும் நாம் அன்பு கொள்ள முடியாது; சமூகத்திலுள்ள தீமையையும், கோரத்தையும் நாம் நேசிக்க முடியாது; இத்தகைய கெட்டவைகளை ஒழிப்பதுதான் நமது குறிக்கோள், மக்களுக்கு இது தெரியும். இதை நமது எழுத்தாளர்களும், கலைஞர்களும் புரிந்து கொள்ள முடியாதா?

''கலையும் இலக்கியமும் பிரமாதமான அம்சங்களையும், மோசமான அம்சங்களையும்-ஒன்றைபபோல, மற்றொன்றையும் ஒரே மாதிரி வற்புறுத்திப் பாரபட்சமில்லாமல் சித்தரித்துக் காட்டுகின்றன.''

இம்மாதிரி ஒரு அபிப்பிராயம் தெரிவிப்பது, பல கருத்துக்களை ஒரேயடியாகக் குழப்பி அள்ளித் தருவது போலாகும். கலையும், இலக்கியமும் எப்பொழுதும், பிரமாத அம்சத்தையும், மோசமான அம்சத்தையும் பாரபட்ச மில்லாமல் வர்ணிப்பதில்லை. பல குட்டி பூர்ஷ்வ எழுத்தாளர்கள், பிரமாதமான அம்சங்களைக் கண்டறிந்ததே கிடையாது; அவர்கள் மோசமான அம்சத்தைத்தான் வர்ணிப்பார்கள்; அதை, 'சிருஷ்டியை அம்பலப்படுத்துகின்ற இலக்கியம்' என்பார்கள். தோல்வி மனப்பான்மை, நம்பிக்கையின்மை இவற்றையே பரப்பும்படியான நூல்களைக்கூட அவர்கள் சிருஷ்டிக்கிறார்கள்.

படிப்பகம்

padippakam



சோஷலிசப் புணர் நிர்மாண வேலை நடந்துகொண்டிருக்கும் காலத்தில், சோவியத் யூனியன் இலக்கியம், பிரமாதமான அம்சத்தை மட்டும் பிரதானமாக விவரித்தது. குறைபாடுகளை ஒப்புக்கொண்ட போதிலும், பிரமாதமான அம்சங்களின் ஒளிக்குப் பின்னணியாய் அமைவது மாதிரி, அவைகளை அப்படித் தொட்டுக்காட்டியுள்ளார்கள். பிரமாத அம்சத்தையும், மோசமான அம்சத்தையும் ஒரே அளவில் வற்புறுத்திக் காட்டுவதில்லை.

பிற்போக்குத்தனம் நிறைந்திருந்த காலத்தில், பூர்ஷ்வா எழுத்தாளர்களும், கலைஞர்களும், புரட்சிகரமான பொது மக்களை, கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்களென்றும் வர்ணித்தார்கள்; ஆனால் தங்களைத் தெய்வாம்சங்கள் என்று வர்ணித்தார்கள். இவ்விதமாக, பிரமாதமான அம்சத்தையும், மோசமான அம்சத்தையும் புரட்டிக் கூறினார்கள்.

உண்மையான-புரட்சிகரமான எழுத்தாளர்களும், கலைஞர்களும்தான், புகழ்வது, அம்பலப்படுத்துவது என்பதற்கு இடையே ஒட்டாமல் நிற்கும் பிரச்சினையைச் சரிவரத் தீர்க்க முடியும். பொதுமக்களுக்குத் தீங்கிழைக்கும் ஒவ்வொரு மோசமான அம்சத்தையும் அம்பலப்படுத்தியாக வேண்டும்; அதே சமயத்தில், பொதுமக்களின் ஒவ்வொரு புரட்சிப் போராட்டமும், புகழப்பட வேண்டும். இதுதான் புரட்சிகரமான எழுத்தாளர்கள், கலைஞர்களின் அடிப்படையான கடமையாகும்.

''கலை இலக்கியத்தின் பணி, சதாசர்வகாலமும் அம்பலப் படுத்தும் வேலையைச் செய்து கொண்டிருப்பதுதான்.'' இந்த மாதிரிப் பேசுவது, முன்னால் சொல்லியதுமாதிரி, சரித்திரத்தைப் பற்றிய விஞ்ஞானமோ, சரித்திர ரீதியான லோகாயதமோ தெரியாததின் விளைவு என்றுதான் அர்த்தம்.

நான் எடுத்துக் காட்டியபடி, கெட்ட அம்சத்தை அம்பலப்படுத்துவது மட்டுந்தான் கலை இலக்கியத்தின் பணியல்ல. புரட்சிகரமான எழுத்தாளர்களும், கலைஞர்களும், ஆக்கிரமிப்புக்காரர்கள், சுரண்டுபவர்கள், அடக்குமுறையைக்

படிப்பகம்

padippakam



கையாளுபவர்கள், இவர்களை மட்டும் அம்பலப்படுத்துவதோடு தங்கள் வேலையைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் இயற்கையாக மக்களிடத்திலும் குறைபாடுகள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் குறைகளை, ஆக்கிர மிப்பாளர்களும், சுரண்டல்காரர்களும், அடக்கு முறை செய்பவர்களும் நடத்தும் ஆட்சியால் மிகைப்படுத்தி விரிந்த அளவில் கூறப்படுகின்றன. ஆக்கிரமிப்பாளர்கள், சுரண்டல் காரர்கள், அடக்குமுறை செய்பவர்கள் இவர்களால் இழைக் கப்படும் குற்றங்களின் மீது நமது புரட்சிகர எழுத்தாளர்களும், கலைஞர்களும் குற்றம் சாட்ட வேண்டுமே யொழிய, மக்களைக் குறை கூறக்கூடாது. பொதுமக்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவர்களுக்கு எப்படிக் கல்வி பயில்விப்பது, அவர்கள் தரத்தை எப்படி உயர்த்துவது என்பதுதான் ஒரே பிரச்சினை. புரட்சி எதிர்ப்புக் கலைஞர்களும், எழுத்தாளர்களும் மட்டும்தான் மக்களை ''முட்டாள் பிறவிகள்'' என்று கருதுவதோடு, புரட்சிகரமான மக்களை ''கொடுமை நிறைந்த பாமரக்கூட்டம்'' என்றும் கூறத் துணிவார்கள்.

''கட்டுரைகள் தான் இந்தக் கூட்டத்திற்குச் சரியாகும். லூசூன் கையாண்ட நடைதான் சரியான நடையென்பது இன்றைக்கும் பொருந்தும்.''

லூசூன் கிண்டல் நடையில் எழுதியுள்ள கட்டுரைகள்-மக்களது எதிர்ப்புக்களைப்பற்றி எழுதும்போது மட்டுந்தான், சரியானபடி தாக்குதவற்கேற்ற நடையென்று சொல்லலாம். பைசாச சக்திகளின் ஆட்சியின் கீழ் வாழ்ந்தவர் லூசூன். அவருக்குப் பேசக்கூடாது என்று தடை. ஆகவே தான், அவர் கிண்டல் நடைக் கட்டுரைகள் மூலம தனது போரைத் தொடுத்தார்; இப்படி அவர் கையாண்டது முற்றிலும் சரியாகும்.

சீனாவில், பாசிஸ்டுகளும், பிற்போக்குக் கும்பல்களும், குத்துகின்றது போன்ற கிண்டல் நடை மூலம் தாக்கப்பட வேண்டியதில் சந்தேகமில்லை. ஆனால் ஷான்-கான்னிங் எல்லைப் பிராந்தியங்களிலும் எதிரியின் பின்னாலுள்ள, ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களிலும், எதிர்ப் புரட்சிக்காரர்களும்,

படிப்பகம்

padippakam



உளவாளிகளும் தவிர, மற்றவர்களுக்கெல்லாம் பூரண சுதந்திரமும், ஜனநாயகமும் வழங்கப்பட்டிருக்கும் இடங்களில் கட்டுரை எழுதுபவர்கள் லூசூன் நடையைக் கையாளத் தேவையில்லை. இங்கெல்லாம், நீங்கள் தாராளமாக, எதையும் ஒளிக்கத் தேவையின்றி, பகிரங்கமான மொழியில், பொதுமக்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளும் தோரணையில் எடுத்துக் கூறலாம். மக்களின் எதிரிகளைப் பற்றியில்லாமல் மக்களைப்பற்றி எழுதும்போது அவர் கட்டுரை எழுதிய காலத்திலும், லூசூன் தனது கிண்டல் நடையை, புரட்சிகரமான மக்களுக் கெதிராகவோ, புரட்சிகரமான கட்சிகளுக்கெதிராகவோ பிரயோகித்ததில்லை. மக்களைப் பற்றி எழுதும்போது அவர் கையாண்ட நடைக்கும், அவர்களது எதிரிகளைப் பற்றி எழுதும்போது கையாண்ட நடைக்கும் படு வித்தியாசமுண்டு. நான் ஏற்கனவே எடுத்துக் காட்டியபடி, நாம் மக்களின் குறை பாடுகளை, மக்களின் நிலையில் நின்றுகொண்டு விமர்சனம் செய்யவேண்டும்; அதுவும், அந்த மக்களைக் காப்பாற்றவும், கல்வி பயிற்றுவிக்கவும் என்ற நோக்கத்தில் இதய பூர்வமான உணர்ச்சியுடன் செய்ய வேண்டும். ஆனால் எதிரிகளை எந்த ஈவிரக்கமற்ற முறையில் தாக்குகிறோமோ, அதே முறையை உங்கள் தோழர்கள்மீதும் கையாண்டால், நீங்களும் எதிரியைப் போன்ற நடவடிக்கை எடுப்பவர்களாவீர்கள்.

அதற்காக, கிண்டல் சித்திரத்தையே விட்டுவிடுவோமா? கிண்டல் சித்திரத்திலேயே பலவிதங்கள் உண்டு - எதிரியைப் பற்றி எழுதுவதற்கு ஒரு மாதிரி, நண்பர்களைப்பற்றி எழுதுவதற்கு வேறொரு மாதிரி, உங்கள் முகாமிலிருக்கும் மக்களைப் பற்றி எழுதும்போது மற்றொரு மாதிரி உண்டு. அத்தகைய மூன்று விதமான கிண்டல் நடை, மற்றவைகளைவிட வேறுபட்டதாகும். கிண்டல் நடையையே நாம் விட்டுவிட வேண்டியதில்லை; ஆனால் அதைத் துஷ்பிரயோகப்படுத்துவதை விட்டுவிட வேண்டும்.

"நன்மையையும், திறமையையும் பற்றிப் புகழ் பாடுவது என் வேலையல்ல! நல்ல அம்சத்தைப் புகழ்வதனால், அது உயர்ந்த

படிப்பகம்

padippakam



கலையென்று நிச்சயமாகச் சொல்லிவிட முடியாது; மோசமான அம்சத்தை அம்பலப்படுத்துவதானால், அது கீழான கலையென்று துணிந்து சொல்லிவிட முடியாது.''

நீங்கள் ஒரு பூர்ஷ்வா வர்க்க எழுத்தாளன், கலைஞனாக இருந்தால், நீங்கள் தொழிலாள வர்க்கத்தின் துதிபாட மாட்டீர்கள்; அதற்குப் பதிலாக பூர்ஷ்வா வர்க்கத்தின் புகழ்பாடுவீர்கள் என்பது இயற்கை. அதே போல நீங்கள் ஒரு பாட்டாளி வர்க்க எழுத்தாளன், கலைஞனாக இருந்தால், பாட்டாளி வர்க்கத்தையும், தொழிலாள மக்களையும் மட்டுந் தான், புகழ்ந்துபாடுவீர்களென்பது இயற்கை. ஆனால், நீங்கள் இந்தப்பக்கம் அல்லது அந்தப்பக்கம் ஏதாவது ஒரு பக்கத்தில் தானிருக்க வேண்டும்.

பூர்ஷ்வா சமூகத்தின் சிறந்த அம்சத்தைப் புகழ்ந்துகூறும் நூல்கள், உயர்ந்தவைகளாகத் தானிருக்கும் என்ற அவசிய மில்லை. அதுபோல், அந்த சமூகத்தின் மோசமான அம்சத்தைக் கூறும் நூல்கள், மட்டரகமாக இருக்கும் என்ற அவசியமு மில்லை. பட்டாளி வர்க்கத்தின் சிறந்த அம்சங்களைப் புகழ்ந்து கூறும் நூல்கள், மட்டரகமென்று சொல்லிவிட முடியாது; ஆனால் பட்டாளி வர்க்கத்தின் ''இருண்டநிலை'' என்று கூறப்படுகிறதே, அதைப்பற்றி வர்ணிப்பது நிச்சயமாகக் குற்றமாகும். கலை, இலக்கியம் பற்றிய சரித்திரத்தில், இந்த உண்மை நிலை நாட்டப்படவில்லையா? சரித்திரத்தையும் நாகரிகத்தையும் சிருஷ்டிக்கும் மக்களை, ஏன் நாம் வானளாவப் புகழ்ந்து பேசக்கூடாது? பாட்டாளி வர்க்கத்தை, கம்யூனிஸ்ட் கட்சியை, புதிய ஜனநாயகத்தை, சோஷலிசத்தை, நாம் ஏன் புகழ்ந்து பாடக்கூடாது?

பொது மக்களின் உன்னத லட்சியத்தைப்பற்றி உற்சாகம் கொள்ளாதவர்கள் சிலர் இருக்கிறார்கள். மக்களின் போராட்டத் திலும், வெற்றிகளிலும், மக்களின் முன்னணிப் படையோடு கலக்காமல் தனித்து நின்று வேடிக்கை பார்ப்பவர்கள் மாதிரி அவர்கள் நடந்து கொள்கிறார்கள். அவர்களுடைய பிரதானமான

படிப்பகம்

padippakam



வேலை யென்னவென்றால், தங்களைப் பற்றியும், தங்களைப் பெருமைப் படுத்திக் கொள்வதைப் பற்றியும், அல்லது தங்களைப் பாராட்டுபவர்களைப் பற்றியும், அல்லது அவர்களின் சிறு கூட்டுக்குள் உலவித்திரியும் சிலரைப் பற்றியும் மட்டும் கவலை எடுத்துக் கொள்வதுதான். இத்தகைய குட்டி பூர்ஷ்வாத் தனி மனிதவாதிகள், மக்களின் பண்புகளையும், சாதனை களையும் புகழ்ந்து பேசப் பிரியப்பட மாட்டார்கள்; அல்லது போராட்டத்திற்காக, புரட்சிகரமான மக்களின் தீரத்தைத் தூண்டிவிட விரும்பமாட்டார்கள்; வெற்றியில் அவர்களுக் கிருக்கும் நம்பிக்கையைப் பலப்படுத்த மாட்டார்கள். இத்தகையவர்கள், புரட்சி முகாமில் மின்மினிப் பூச்சிகள் மாதிரி; இவர்களது ''புகழ்மாலைகளையும்'' புரட்சிகரமான மக்கள் பொருட்படுத்துவதில்லை.

''இது நமது நிலை பற்றிய பிரச்சினையல்ல; ஏனெனில் நமதுநிலை சரியானது; நமது நோக்கங்கள் நல்லவை; நாம் கருத்தைக் கிரகித்துக் கொண்டோம்; அதைச் சொல்லும் முறைதான் நன்றாக இல்லை; ஆகவே, அதன் பலன் நல்லதாக இல்லை.''

தர்க்க ரீதியான லோகாயதம் என்ற கண்ணோட்டத்தில், நோக்கமும், பலாபலனும் என்ற பிரச்சினையைப் பற்றி நான் ஏற்கனவே வியாக்கியானம் செய்துள்ளேன். ஆகவே இப்பொழுது, பலாபலனைப் பற்றிய பிரச்சினை நிலைபற்றிய பிரச்சினையாக ஆகாதா என்று பார்ப்போம். ஒரு காரியத்தை ஒருவர் செய்ய முற்படும்பொழுது, அதனால் ஏற்படும் பலாபலன் என்ன என்று கணக்குப் போடாமல், அதன் நோக்கத்தை மட்டும் கவனிப்பது எப்படி இருக்குமென்றால், ஒரு டாக்டர், தனது நோயாளிக்குத் தான் கொடுக்கப் போகும் மருந்து, நோயைத் தீர்க்குமா, ஆளைக் கொல்லுமா என்று கவனிக்காமல் மருந்து எழுதிக் கொடுப்பதைப் போல இருக்கும். அது போலவே, ஒரு அரசியல்கட்சி, ஒரு பிரகடனத்தை வெளியிடு முன், அது நிறைவேற்றப்படுமா என்று கணக்குப் பார்க்காமல் வெளியிட்டால் அது சரியா? அதைத்தானா, ஒரு நல்ல நோக்கம்

படிப்பகம்

padippakam



என்று சொல்லுவீர்கள்? பலா பலன்களைக் கணக்கிடும் போது, நாம் தவறிவிடலாம்; ஆனால் ஒருவழி, விரும்பத் தகாத விளைவுகளை உண்டாக்குகிறது என்று ருசுப்பிக்கப்பட்ட பிறகு, அதையே கையாளுவது என்று நீங்கள் பிடிவாதமாகச் சாதித்தால், அப்பொழுது, உங்கள் நோக்கங்களை நல்லவையென்று சொல்ல முடியுமா?

ஒரு அரசியல் கட்சியையோ, அல்லது ஒரு டாக்டரையோ, அவர்களால் சாதிக்கப்படும் யதார்த்த விளைவுகள் அல்லது பலாபலன்களைக் கொண்டுதான் நாம் எடை போடுகிறோம். அதே போலத்தான் ஒரு எழுத்தாளனையோ, கலைஞனையோ நாம் எடைபோட்டுத் தீர்மானிக்க வேண்டும்.

உண்மையிலேயே, நல்ல நோக்கங்கள் கொண்டவர்கள், அதனால் விளையும் பலனைக் கணக்கிடவேண்டும்; கடந்த கால அநுபவங்களை எல்லாம் பார்க்க வேண்டும்; அவர்கள் கையாண்ட முறையையும், அல்லது அவர்கள் கையாண்டதாகச் சொல்லபடும் நடை, வடிவங்களையும் கவனமாக ஆராய வேண்டியது அவசியமாகும். அவர்களுக்கு உண்மையிலேயே நல்ல நோக்கங்கள் இருக்குமானால், அவர்கள் நூல்களில் குறைபாடுகள், தவறுகள் எதுவும் தென்பட்டால் அவைகளை ஒப்புக்கொள்ள வேண்டும்; மனப்பூர்வமான சுய-குண தோஷ விமர்சனம் செய்து பார்க்கவேண்டும்; அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ளத் துணிவு பெறவேண்டும். இந்த உணர்வில்தான் கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தினர்கள், சுய-குண தோஷ விமர்சனத்தைக் கையாளுகிறார்கள். அப்பொழுதுதான், உங்கள் நிலை, சரியான நிலையென்று சொல்ல முடியும். அதே சமயத்தில், நடைமுறை யதார்த்தத்தைப்பற்றி, பொறுப்பான, கவனமான ஒரு போக்கைக் கடைப்பிடித்து நிற்பதன் மூலம்தான், எது சரியான நிலை என்று உங்களால் புரிந்து கொள்ளமுடியும்; சரியான நோக்கத்தையும் கிரகித்துக் கொள்ள முடியும். இந்த வழியைப் பின்பற்றி நீங்கள் உண்மையாக அநுபவத்தில் இறங்கா விட்டால் - ஆனால் அதே சமயத்திலே நீங்கள் தான் சரியான வழியில் செல்லுவதாகச் சாதனை பண்ணினால் - அப்பொழுது,

படிப்பகம்

padippakam



நீங்கள் என்ன சொன்னாலும் சரி, உங்களுக்கு ஒன்றும் புரிய வில்லையென்றுதான் அர்த்தம்.

"மார்க்சிசம்-லெனினிசத்தைக் கற்றறிவது, தர்க்க ரீதியான லோகாயதத்தை யாந்திரீகமாக பாடம் ஒப்பிப்பதாகும்; அது ஆக்கல் உணர்ச்சியை நசுக்கிவிடும்."

மார்க்சிசம், லெனிசத்தைக் கற்றறிவது என்றால், உலக சமூகம், இலக்கியம், கலை இவற்றைத் தர்க்கரீதியான, சரித்திர ரீதியான கண்ணோட்டத்தில் ஆராய்ந்து படிப்பது என்றுதான் அர்த்தம்; ஒரு இலக்கியம், அல்லது கலை நூலில், தத்துவ சாஸ்திரச் சுருக்கம் ஒன்றைச் சேர்த்துக் கொள்வது என்று அர்த்தமல்ல. எப்படிப் பௌதிக சாஸ்திரத்தில், அணுசக்திகள் எலெக்ட்ரான்களை (Electrons) தழுவி நடப்பது தவிர, அவைகளுக்குப் பதிலாக மார்க்சிசம்-லெனினிசம் அமர்ந்து கொள்ளாதோ, அப்படியே ஜீவ இலக்கியம், கலை இவற்றில் யதார்த்தத்தைத் தழுவி நிற்பது தவிர மார்க்கியம்-லெனினிசம் அதற்குப் பதிலாக அமர்ந்து கொள்ளாது. சக்தியில்லாத, வெறும் வரட்டு ஸ்லோகங்கள், ஆக்கல் உணர்ச்சியை உண்மையிலேயே நசுக்கி விடுகின்றன; மேலும், அவைகள் மார்க்சிசம்-லெனினிசத்தையே அழித்து விடுகின்றன. வெறும் வரட்டுவாத மார்க்சிச-லெனினிசம், மார்க்சிசம்-லெனினிசம் ஆகாது; அது மார்க்சிச-லெனினிசத்திற்கு நேர் விரோதமானது.

அப்படியானால், ஆக்கல் உணர்ச்சியையே, மார்க்சிசம்-லெனினிசம் அழித்து விடாதா? ஆம், அழித்துவிடும். அது நிலப்பிரபுத்வ, பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வா ஆக்கல் உணர்வை அழித்துவிடும்; மிதவாதம், தனி மனிதவாதம், ஸ்தூலமற்றவாதம் இவைகளிலிருந்து வேர்விடும் ஆக்கல் உணர்வை அழித்துவிடும்; கலை-கலைக்காக என்று சொல்லுகிற, பிரபுத்வ, தோல்வி மனப்பான்மை கொண்ட, நம்பிக்கையின்மை நிரப்பிய ஆக்கல் உணர்வை அழித்துவிடும். பொதுமக்களுக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் சம்பந்தமில்லாத எந்தவிதமான ஆக்கல் உணர்வையும் அது அழித்துவிடும்.

படிப்பகம்

padippakam



கலை-கலைக்காக என்று சொல்லுகிற, பிரபுத்வ, தோல்வி மனப்பான்மை கொண்ட, நம்பிக்கையின்மை நிரப்பிய ஆக்கல் உணர்வை அழித்துவிடும். பொதுமக்களுக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் சம்பந்தமில்லாத எந்தவிதமான ஆக்கல் உணர்வையும் அது அழித்துவிடும். பாட்டாளிவர்க்க எழுத்தாளர்கள், கலைஞர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், இத்தகைய ஆக்கல் உணர்ச்சி ரகங்கள் அழிக்கப்பட வேண்டியது நியாயமில்லையா? நியாயமென்றுதான் நான் நினைக்கிறேன். புதியவற்றிற்கு இடமளிக்கும்படியாக, இவைகள் அழித்தொழிக்கப்பட வேண்டும்.

## தத்துவ உணர்வும் ஸ்தாபன பலமும்

மேலே எடுத்துக் கூறப்பட்ட பிரச்சினைகள் யேனானிலுள்ள இலக்கிய, கலைஞர்களின் வட்டாரங்களில் எழுதப்பட்டன. இவைகள் எதைக் குறிப்பிடுகின்றன? இலக்கிய, கலைஞர்களின் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் கட்சி நடவடிக்கைகளையும், இலக்கியத்தையும் பற்றிப் புரிந்துகொள்வதில் தவறான போக்குகளையும், நடைமுறைகளையும் தீவிரமாகக் கைக்கொண்டவர்கள் என்பதைக் குறிப்பிடுகின்றன. நமது தோழர்கள், இன்னும் கற்பனாவாதம், அந்நிய கண்மூடித்தனமான கோஷம்போடும் கொள்கை, பிரமைகள், வெறும் வாய்க்கூச்சல், யதார்த்தமான நடைமுறைகளைக் குறைத்து மதிப்பிடுவது, பொது மக்களிடமிருந்து தனித்து நிற்பது முதலிய இதர குறைபாடுகள் கொண்டவர்களாக இருக்கிறார்கள். நமது வழி முறைகளை நாம் திருத்திக் கொள்ள வேண்டியது மிக மிக முக்கியமானதாகும்.

பாட்டாளி வர்க்கத்திற்கும், குட்டி பூர்ஷ்வா வர்க்கத்திற்குமிடையே உள்ள வித்தியாசத்தை, நமது தோழர்களில் பலர், இன்னும் புரிந்து கொள்ளவில்லை; நமது அங்கத்தினர்களில் பலர் ஸ்தாபன ரீதியாகக் கட்சியில் சேர்ந்தவர்கள்; ஆனால், தத்துவரீதியாகக் கட்சியில் அரை குறையாகச் சேர்ந்தவர்கள்;

படிப்பகம்

padippakam



அல்லது முழுவதுமே கட்சியில் சேர்ந்தவர்களல்ல. சுரண்டுகின்ற வர்க்கங்களால் யையாளப்பட்ட முட்டாள்தனமான போக்கை, பெரும்பாலும் அவர்கள் கைக்கொண்டிருக்கிறார்கள்; பாட்டாளி வர்க்கத்தின் தத்துவத்தைப் புரிந்து கொள்ளவில்லை; கம்யூனிசம் என்றால் என்ன? அல்லது கட்சியென்றால் என்ன வென்றுகூட அவர்களுக்குத் தெரியாது. பாட்டாளி வர்க்கத் தத்துவம் என்றால் ''வழக்கமான வஸ்து'' தான் என்று நினைப்பவர்கள். இந்த ''வழக்கமான வஸ்து''வை நன்றாக அறிந்து கொள்வது என்பது சுலபமான காரியமல்ல என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. உண்மையான கம்யூனிஸ்டுகள் என்ற அரை குறையான தன்மைகூட இல்லாதவர்கள் பலர் இருக்கிறார்கள்; அவர்கள், கடைசியாகக் கட்சியைவிட்டு வெளியேறி அத்தியாயத்தை முடிக்கிறார்கள். இன்னும் மோசமான பலரும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஜப்பானியர்களால் ஆரம்பிக்கப்படும் ஸ்தாபனங்களிலோ, அல்லது வாங் சிங் வேய் கட்சியிலோ அல்லது பெரும் பூர்ஷ்வா, நிலச்சுவான்தார் வர்க்கத்தின் ரகஸ்ய ஸ்தாபனங்களிலோ ஒரு காலத்தில் அங்கத்தினர்களாயிருந்தவர்கள். இப்பொழுது, கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும், கட்சியால் நடத்தப்படும் ஸ்தாபனங்களுக் குள்ளும் அவர்கள் ஊடுருவிக் கலந்துவிட்டார்கள்; அவர்கள் தோள்பட்டையில் புரட்சிகரமான பட்டைமட்டும் கட்டிக் கொண்டவர்கள்.

நமது தோழர்களில் பெரும்பாலோர் யோக்கியமும், நாணயமுமுடையவர்களாக இருந்தாலும், நமது கட்சியும், நமது ஊழியர்களும், ஸ்தாபன ரீதியாகவும் தத்துவ ரீதியாகவும் முழுவதும், பெரும் அளவிலும் வழிகாட்டப்பட வேண்டும்; புரட்சிகரமான இயக்கம், பெரும் அளவில் வளர்க்கப்படு வதற்கும், அதைச் சீக்கிரம் சாதிப்பதற்கும் வழிகாட்டப்பட வேண்டும்.

ஸ்தாபன ரீதியாக வழிகாட்டப்படுவதற்கு, தத்துவ ரீதியாக வழிகாட்டப்பட வேண்டியது மிக அவசியம்; இதற்கு, பாட்டாளி வர்க்க - பாட்டாளி வர்க்க எதிர்ப்புத் தத்துவங்களுக்கிடையே

படிப்பகம்

padippakam



யுள்ள முரண்பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். யேனானிலுள்ள கலை இலக்கிய வட்டாரங்களைச் சேர்ந்த வர்களிடையே, சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட தத்துவ ரீதியான போராட்டம் மாதிரி ஏற்பட வேண்டியது மிக மிக அவசியம்.

கலை இலக்கியத்தையும் உள்ளிட்டுத் தங்கள் சுய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் பல வழிகளை இடைவிடாது குட்டி பூர்ஷ்வா கண்ணோட்ட முடையவர்கள் அனுஷ்டிக் கிறார்கள். அவர்கள், தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களை டமாரமடிக்கிறார்கள்; குட்டி பூர்ஷ்வாப் படிப்பாளிகளின் அபிப்பிராயங்களுக்கு ஒத்தமுறையில், கம்யூனிஸ்ட் கட்சியும், உலக முழுவதும் திருத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்து கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் நாம் ஆணித்தரமாக என்ன சொல்ல வேண்டுமென்றால், ''தோழர்களே, உங்கள் அபிப் பிராயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது; பாட்டாளி வர்க்கமும், பொதுஜனங்களும், உங்கள் அபிப்பிராயங்களுக்கு இரையாக முடியாது; அதாவது அது பெரும் பூர்ஷ்வாக்களுக்கும், நிலப் பிரபுத்வ வர்க்கத்திற்கும் இரையாவதென்பது ஆகிவிடும். நாம் நமது கட்சியை இழப்பதற்கும், நமது தேசத்தை இழப்பதற்கும், ஒருவேளை உங்கள் தலைகளையே இழக்க வேண்டிய நிலையிலும், அது கொண்டுவிடும்'' என்று சொல்லிவிட வேண்டும். அப்படியானால், நாம் யாரிடம் சேரவேண்டும்? பாட்டாளி வர்க்கத்திடமும், அதன் முன்னணிப்படையிடமும் சேரவேண்டும். அவர்கள் நிலையிலிருந்துதான், கட்சியையும், உலகத்தையும் புனரமைப்புச் செய்ய முடியும்.

இந்த விவாவதத்தின் முக்கியத்துவத்தை, கலை-இலக்கிய வட்டாரத்தைச் சேர்ந்த நமது தோழர்கள் உணர்ந்து, எதிரியை எதிர்த்து நிற்கும் இந்தப் போராட்டத்தில், அவர்களது நண்பர்களுடனும், தோழர்களுடனும் சேர்ந்து நின்று தீவிரமாக ஈடுபடவேண்டுமென்று நாங்கள் எதிர் பார்க்கிறோம். இவ்விதமாக, ஒவ்வொரு கட்சி அங்கத்தினரும் பலம்பெற்று, நமது ஊழியர்களிடையே ஐக்கியம் ஏற்பட்டு, ஸ்தாபன ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும் ஒன்று திரண்டு நிற்பார்கள்.

படிப்பகம்

padippakam



தத்துவ ரீதியாக அவர்கள் குழப்பமடைந்திருப்பதால் தான், நம்முடைய தோழர்கள் பலருக்கு, நமது ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களுக்கும், இதர சீனப் பிரதேசங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களு டைய குழப்பத்தினால், பல தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. தோழர்களாகிய உங்களிலே பலர், ஷாங்கையின் மாடிவீடு களிலிருந்து வந்திருப்பவர்கள். அத்தகைய மாடி வீடுகளிலிருந்து நீங்கள், எங்களுடைய தளங்களுக்கு வந்திருப்பதானது, ஒரு பிரதேசத்திலிருந்து, மற்றொரு பிரதேசத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்பது மட்டுமல்ல; ஒரு சரித்திர காலகட்டத் திலிருந்து மற்றொரு காலகட்டத்திற்கு வந்திருக்கிறீர்கள் என்று அர்த்தம். பெரும் நிலப்பிரபுத்வ வர்க்கமும், பெரும் பூர்ஷ்வா வர்க்கமும் ஆட்சி புரியும். அரை-நிலப்பிரபுத்வ, அரை-காலனி சமுதாயம் நிலவும் இடத்திலிருந்து, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலுள்ள புரட்சிகரமான, புதிய ஜனநாயக சமுதாயம் நிலவும் இடத்திற்கு வந்திருக்கிறீர்கள். எங்கள் தளங்களுக்கு நீங்கள் வந்திருப்பதன் மூலம், சீன சரித்திரமே இதுவரை கண்டறியாத ஒரு யுகத்திற்குள்-தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களும், மக்களின் விரிந்த ஜனப்பகுதியும் ஆட்சி புரியும் ஒரு யுகத்திற்குள்-நீங்கள் காலடி எடுத்து வைத்திருக்கிறீர்கள். எங்களைச் சுற்றியுள்ள மக்கள் மாறிவிட்டார்கள்; நமது பார்வையாளர்கள் மாறிவிட்டார்கள்; கடந்த யுகங்கள் எல்லாம் ஓடி மறைந்து விட்டன; அவைகள் இனித் திரும்பி வரப் போவதில்லை. நாம், புதிய ஜனப்பகுதியோடு தங்கு தடை யின்றிக் கலந்து கொள்ளவேண்டும்.

புதிய மக்கள் தொகையோடு, இன்று வாழ்ந்து கொண்டி ருக்கும் நமது தோழர்களில் சிலர், இன்னும் போர்க்களமில்லாத வீரர்கள் மாதிரிப் புரிந்து கொள்ள முடியாதவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் கிராமங்களுக்குப் போனாலும்சரி, அல்லது யேனானில் இருந்தாலும் சரி, அவர்கள் பல கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.



படிப்பகம்

padippakam



நமது தோழர்களில் சிலர் ''பொதுவான, பின்னரங்கத்தில் உள்ள வாசகர்களுக்காக நான் எழுதிக் கொண்டிருப்பேன்; அவர்களை எனக்கு நன்கு தெரியும்; எனது எழுத்துக்கள், தேசிய முக்கியத்துவம் பெறும்'' என்று நினைக்கலாம். இம்மாதிரி நினைப்பது முழுவதும் பிசகு. பொதுவான பின்னரங்கத்தில் உள்ள நிலைகளும் மாறிக் கொண்டிருக்கின்றன. அங்குள்ள வாசகர்களும், ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களில் இன்று வாழ்ந்துவரும், எழுத்தாளர்களால் திருப்பிச் சொல்லப்படும் அதே பழைய கதைகளை விரும்பவில்லை. புதிய மக்களைப் பற்றியும், புதிய உலகத்தைப் பற்றியும் கொஞ்சம் இந்த எழுத்தாளர்கள் எடுத்துத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே ஜப்பானிய எதிர்ப்புத் தளங்களில் உள்ள மக்களுக்காகச் செய்யப்படும் வேலைதான் உண்மையான தேச முக்கியத்துவம் வாய்ந்தாயிருக்கும். உதாரணமாக, ஏ.படயேவ் எழுதிய 'பத்தொன்பதுபேர்' என்ற கதை, ஒரு சிறு கொரில்லாப் படையைப் பற்றியதாகும். அது பழைய உலகத்தைச் சேர்ந்த வாசகர்களின் ரசனைக் குகந்த முறையில் எழுதப்படவில்லையாயினும் அதன் செல்வாக்கு உலகமுழுவதும் பரவியது.

சீனா முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது, பின்னடைய வில்லை! நமது புரட்சித் தளங்கள்-சீனாவின் பிற்பட்ட, அழுகிக் கொண்டிருக்கும் பிரதேசங்கள் அல்ல-சீனாவை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திக்கொண்டு போகிறது! தோழர்களே! நமது வழிகளைத் திருத்த நாம் முற்படும்போது, இந்த அடிப்படை யான உண்மையை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

புதிய மக்களின் யுகத்திற்குத் தகுந்தாற்போல நாம் நம்மை ஆக்கிக்கொள்ள வேண்டுமாதலால், தனிநபருக்கும், பொது ஜனங்களுக்கும் உற்ற உறவை, நாம் தீர்க்கமாக முடிவு கட்டியாக வேண்டும். லூ சூன் கவிதையிலிருந்து இரண்டு வரிகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். "ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் விரல்களை உன்னை நோக்கி நீட்டினால், உன் புருவத்தை

படிப்பகம்

padippakam



நெரித்து வெறித்துப் பார், ஆனால் இளைஞர்களுக்காக உன் சம்மதத்தைத் தெரிவிக்கின்ற முறையில் உன் தலையைத் தாழ்த்தி, காளையைப் போல் வேலை செய்.'' அதுதான் நம்முடைய மந்திர கோஷமாக இருக்க வேண்டும்.

''ஆயிரக் கணக்கான மக்கள்'' என்று சொல்லப்பட்டவர்கள் நமது எதிரிகள், அவர்கள் எவ்வளவு கொடூரம் வாய்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு நாம் ஒரு நாளும் பணியக்கூடாது. ''இளைஞர்கள்'' என்று சொல்லப்பட்டது, பாட்டாளி வர்க்கமும், மக்களின் வெகுஜனப் பகுதியுமாகும். சகல கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களும், சகல புரட்சிக்காரர்களும், எல்லாப் புரட்சிகரமான எழுத்தாளர்களும், கலைஞர்களும், லூ சூனின் மந்திர கோஷத்தைப் பின்பற்ற வேண்டும். காளை பொறுமையாகவும் சளைக்காமலும் உழைப்பதுபோல, பாட்டாளி வர்க்கத்திற்காகவும், மக்களுக்காகவும் நீங்கள் உழைக்க வேண்டும். இந்த லட்சியத்தை அடைவதற்காக உங்கள் சக்தியனைத்தையும் செலவிடுங்கள்; இந்த வேலையைச் செய்து முடிக்க உங்களால் எவ்வளவு முடியுமோ, அந்த அளவுக்குப் பாடுபாடுங்கள்; உங்கள் உயிர் உடலில் இருக்கும்வரை உங்கள் வேலையை நிறுத்தக் கூடாது. படிப்பாளிகளாகிய நீங்கள் பொதுமக்களோடு கலந்து நின்று பொது மக்களுக்காக வேலை செய்வது என்பது ஒரு சிரமமான, கஷ்டம் நிறைந்த அனுபவம் என்று கருதலாம்; பல சங்கடங்களை நீங்கள் சமாளிக்கவேண்டி நேரிடலாம். ஆனால் இதைத் தொடர்ந்து செய்வது என்று நீங்கள் கங்கணம் கட்டிவிட்டால், இந்த இலட்சியத்தை நீங்கள் அடைந்தே தீரலாம்.

நான் எடுத்துக் காட்டியவைகளில், நமது கலாச்சார இலக்கியத்தில் நாம் கைக்கொள்ள வேண்டிய, சில அடிப்படைப் பிரச்சினைகளைப்பற்றி மட்டுந்தான், நான் குறிப்பிட்டிருக்கின்றேன். பல ஸ்தூலமான பிரச்சினைகள் இன்னும் இருக்கின்றன; அவைகளை இன்றிருந்து நாம் தொடர்ந்து படித்துணர வேண்டும்.

படிப்பகம்

padippakam



நீங்கள் எல்லாத் தோழர்களும், இந்த வழியில் முன்னேறிச் செல்வதென்று தீர்மானித்திருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். நமது பழக்கங்களைத் திருத்திக் கொள்வதிலும், நீண்டகால வேலை முறையிலும், ஆராய்ச்சியிலும், உங்களையும் உங்கள் நூல்களையும் நீங்கள் எல்லோரும் திருத்திக் கொள்வீர்க ளென்றும், தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்களும், மக்களின் வெகு ஜனப்பகுதியும் உற்சாகமாக வரவேற்கும் படியான உன்னதமான கலை நூல்களை நீங்கள் சிருஷ்டித்துத் தருவீர்களென்றும், தேசத்தின் ஜனநாயக, இதர பிரதேசங்களிலு முள்ள இலக்கிய, கலை இயக்கத்தைப் பிரகாசம் நிறைந்த புதிய காலகட்டத்திற்கு நீங்கள் உயர்த்திக்கொண்டு போவீர்களென்றும் நான் நம்புகின்றேன்.

---

**சிறு விளக்கம்:**

மா சே-துங் எழுதிய 'கலை-இலக்கியப் பிரச்சினைகள்' என்ற ஆங்கில மூலத்தின் மொழியாக்கம் இந்த நூல். மேதை மா சே-துங்கின் சிந்தனை களுக்கும், கருத்துக்களுக்கும் பொருந்தாத வைகளோ-வேறு குறைபாடுகளோ, இதில் காணப்பட்டால், அது மொழியாக்கம் செய்தவரைச் சாருமேயொழிய, மா சே - துங்கின் மூல நூலைச் சாராது.(மொழிபெயர்ப்பாளர்)

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

| | |
|---|---|
| வால்காவிலிருந்து கங்கை வரை | ராகுல்ஜி |
| பொதுவுடைமைதான் என்ன? | ராகுல்ஜி |
| நான் எப்படிக் கம்யூனிஸ்ட் ஆனேன்? | வி. பி. சிந்தன் |
| சட்டமன்ற நெறிமுறைகள் | மா. சண்முகசுப்பிரமணியம் |
| அமெரிக்காவிலே | மாக்சிம் |
| லெனினுடன் சில நாட்கள் | மாக்சிம் கார்க்கி |
| தூக்குமேடைக் குறிப்பு | ஜூலிஸ் பூசிக் |
| தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம் | கே. முத்தையா |
| நேற்றுவரை ஒரு ஐ.ஜி.யின் பார்வையில் | கே. என். ஸ்ரீநிவாசன் |
| இந்திய விடுதலைப் போரில் கம்யூனிஸ்டுகளின் பங்கு | பி. ராமமூர்த்தி |
| தமிழ்நாட்டுத்தொழிற்சங்க இயக்கம்-என் நினைவுகள் | ,, |
| The Role of the communists in India's struggle for freedom | ,, |
| தெலுங்கானா போராட்டம் | வி.பி. சிந்தன் |
| ரஷ்யப் புரட்சியின் வரலாறு | வி.பி. சிந்தன் |
| மேடும் பள்ளமும் | நாஞ்சில் மனோகரன் |
| புரட்சி | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் |


# தமிழ்ப் புத்தகாலயம்

**11, சிவப்பிரகாசம் தெரு, பாண்டிபஜார்**

**தி. நகர். சென்னை-600 017.**


படிப்பகம்